# PUTTAGA NANBAN

VOL. 1, NOS. 1-4, DEC.-SEP. 1961-62

12 JUN 1965

SOUTHERN LANGUAGES BOOK TRUST

துவக்க இதழ்

மலர் : 1
இதழ் : 1
டிசம்பர் 1961

# புத்தக நண்பன்

Vol. 1.
Nos. 1 to 4.
December 1961 to
September 1962

காலாண்டுப் பத்திரிகை

வெளியிடுவோர்:
தென்மொழிப் புத்தக
டிரஸ்ட்,
25, ஸ்டெர்லிங் ரோட்,
சென்னை - 34.

# TRUST SPONSORED PUBLICATIONS

## ARE

## AVAILABLE FOR SALE ALL OVER THE COUNTRY

*SOLE DISTRIBUTORS*

M/s. S. R. SUBRAMANIA PILLAI,
PUBLISHERS AND BOOKSELLERS,
**TIRUNELVELI JUNCTION**
*For Tirunelveli, Ramanathapuram, Kanyakumari, Coimbatore, Nilgiris and Salem Districts.*

M/s. PALANIAPPA BROTHERS,
PUBLISHERS AND BOOKSELLERS,
TEPPAKULAM POST,
**TIRUCHIRAPALLI-2.**
*For Madurai, Tiruchinopoly and Tanjore Districts.*

M/s. PAARI NILAYAM,
PUBLISHERS AND BOOKSELLERS,
59, BROADWAY,
**MADRAS-1.**
*For North Arcot, South Arcot and Chingleput Districts.*

**FOR BOMBAY**

M/s. POPULAR BOOK DEPOT,
PUBLISHERS AND BOOKSELLERS,
LAMINGTON ROAD,
**BOMBAY-7.**

**FOR DELHI & NEW DELHI**

M/s. ATMARAM & SONS,
PUBLISHERS AND BOOKSELLERS,
KASHMERE GATE,
**DELHI-6.**

WANTED STOCKISTS IN OTHER IMPORTANT TOWNS

*Stocks can also be had from:*

## SOUTHERN LANGUAGES BOOK TRUST

25, STERLING ROAD,
**MADRAS-34**

12 JUN 1965

# வாழ்த்துச் செய்தி

சி. சுப்பிரமணியம்
நிதி-கல்வி அமைச்சர்
தமிழ் நாடு

செயிண்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.
ஆகஸ்டு 29, 1961.

தென் மொழிப் புத்தக டிரஸ்ட், 1955ல் அது துவக்கப்பட்ட காலத்திலிருந்தே பெரியதொரு புத்தக நிலையமாக நல்ல முறையில் பணியாற்றி, நல்ல நூல்களைக் குறைந்த விலையில் வெளியிட்டு, நான்கு தென்னிந்திய மொழிகளிலும் இலக்கியம் படிக்கும் ஆர்வத்தை வளர்ப்பதில் வெற்றி கண்டுள்ளது. இதுவரை டிரஸ்ட் வளர்த்துள்ள படிக்கும் பழக்கத்தை நன்கு திடப்படுத்தும் நோக்கத்துடன் நான்கு மொழிகளிலும் தனித்தனிப் பதிப்புக்களாகக் காலாண்டுப் பத்திரிகை ஒன்றைப் 'புத்தக நண்பன்' என்ற பெயரில் வெளியிட முன்வந்திருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன். 'புத்தக நண்பனு'க்கு என் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

(ஒப்பம்) சி. சுப்பிரமணியம்

தென் மொழிப் புத்தக டிரஸ்டின் அலுவலகம்

"சில புத்தகங்கள் ருசி பார்க்கப்பட வேண்டியவை, மற்றும் சில விழுங்கப் படவேண்டியவை, ஒரு சில மட்டுமே நன்ருக மென்று ஜீரணிக்கப்பட வேண் டியவை."

—பேகன்.

"மிக உயர்ந்த கருத்துக்களைத் தன்னகத்தே அடக்கியுள்ள மொழி அமைப்பே சிறந்த இலக்கியம் எனப்படும்."

—எஜ்ரா பௌண்ட்.

"உலகில் இதுவரை கூறப்பட்டவை, நினைக்கப்பட்டவை ஆகியவற்றில் மிகச் சிறந்தவற்றை அறிந்து கொள்வதே பண்பாடாகும்."

—மாத்தியூ ஆர்னல்ட்.

12 JUN 1965

# புத்தக நண்பன்

மலர் 1: இதழ் 1 டிசம்பர் 1961

ஆசிரியர் :

வி. சுந்தரராஜ் நாயுடு M. A., B. L., T. D.

## இந்த இதழில்

எங்களைப் பற்றி

செய்திக் குறிப்புக்கள்

புத்தகம் வேண்டும்
—ஆர்தர் ஐசன்பர்க்

கண்கவரும் புத்தகம்
—இ. எச். கிளிக், எம். பி. கிளிக்

புத்தக விற்பனை பெருக......
—சதானந்த் பட்கல்

தமிழ் நாட்டில் நூலகங்கள்
—நெ. து. சுந்தரவடிவேலு

கலைக்களஞ்சியம்
—பெரியசாமித் தூரன்

தமிழ்ப் புத்தக விற்பனை
—க. அ. செல்லப்பன்

புகழ் பெற்ற எழுத்தாளர் அறிமுகம் :
சங்கர குரூப்
விஸ்வநாத சத்யநாராயணு
மாஸ்தி வெங்கடேச ஐயங்கார்

புத்தக விமர்சனம்

உங்களுக்குத் தெரியுமா?

★

**புத்தக நண்பன்**
தென் மொழிப் புத்தக டிரஸ்ட்
25, ஸ்டெர்லிங் ரோட்,
சென்னை-34.

★

**ஆண்டுச் சந்தா : ரூ. 2/-**
**தனிப் பிரதி : 50 காசு**

★

## எங்களைப்பற்றி

### தென் மொழிப் புத்தக டிரஸ்ட்

தென் மொழிப் புத்தக டிரஸ்ட் எட்டுத் தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களால் நிறுவப்பட்டது. நான்கு தென்னிந்திய மொழிகளில் உயர்தரமான விலைமலிவான புத்தகங்களைத் தயாரிப்பதற்கும், வெளியிடுவதற்கும் தக்க ஆதரவைத் தருவதே இந்த டிரஸ்டின் நோக்கமாகும்.

1955ஆம் ஆண்டு அக்டோபர் 5-ஆம் நாள் இது இந்தியப் பிரதமர் திரு. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்திய இலக்கியங்கள், உலக இலக்கியங்கள், மரபுவழி வரலாற்று நூல்கள், தத்துவம், சமயம், விஞ்ஞானம், கவிதைகள், நாடகம், நல்ல கதைகள், பிரயாண நூல்கள், எவ்வாறு இயற்றுவது என்று கற்பிக்கும் நூல்கள், மற்றும் குழந்தை நூல்கள் முதலிய பல துறை நூல்களையும் டிரஸ்ட் தேர்ந்தெடுத்து வெளியிடச் செய்துள்ளது. குழந்தை இலக்கியத்தை வளர்க்க 1958ஆம் ஆண்டு ஒரு பரிசுத் திட்டத்தை நடத்தி 15 பரிசுகளைத் தந்தது. டிரஸ்ட் முதலில் வெளியிட்ட குழந்தை நூல்களில் ஒன்று 1959ஆம் ஆண்டு தமிழில் குழந்தை நூல்களுக்கான இந்திய அரசினரின் பரிசைப் பெற்றது.



தென் மொழிப் புத்தக டிரஸ்ட் குழு அங்கத்தினர்களும் அலுவலாளர்களும்

129.361
33Ab

இதுவரை டிரஸ்டின் ஆதரவில் 310 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் கிட்டத்தட்ட 70 சதவீதம் இந்திய ஆசிரியர்களால் இந்தியப் பிரச்சினைகளைக் குறித்து எழுதப்பட்டவை ; மற்றவை அயல்நாட்டு நூல்களின் மொழிபெயர்ப்புக்கள். அவற்றில் 40 நூல்கள் குழந்தை நூல்கள் ஆகும். இங்கிலும், ஜெர்மன், ஃபிரெஞ்ச், ஜப்பான், சீனம், ரஷ்யன், ஸ்வீடிஷ் முதலிய மொழி நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவதற்கு டிரஸ்ட் ஆதரவளித்துள்ளது.

## விற்பனைத் துறையும் பெருக்கமும்

புத்தக விலையைக் குறைப்பதற்கும், அதிக அளவில் பரவுவதற்குமென புத்தக வெளியீட்டாரைத் தமிழிலும் தெலுங்கிலும் முதற் பதிப்பில் 5,000 பிரதி

களையும், மலையாளத்திலும் கன்னடத்திலும் 3,000 பிரதிகளையும் வெளியிடுமாறு இந்த டிரஸ்ட் வற்புறுத்தி வந்துள்ளது. மேலும் முதற் பதிப்பில் 2/5 பங்கை வாங்கிக்கொள்கிறது. இதனால் வியாபாரத் தொடர்பு கவர்ச்சியாக அமைவதுடன், புத்தகப் பங்கீடு, வியாபாரப் பெருக்கம் முதலிய துறைகளுக்கான அறிவியல் முறைகளை நடைமுறையில் நடத்திக் காட்டுவதற்கான நல்வாய்ப்பையும் டிரஸ்ட் பெற முடிகிறது. டிரஸ்டின் வாணிபத் திட்டம் வழி வழியாக உள்ள வியாபார முறைகளுடன் புதிய பங்கீட்டுத் துறைகளையும் பயன்படுத்திப் புத்தக விற்பனையைப் பெருக்குவதே ஆகும்.

### கருத்தரங்குகள்

இந்த டிரஸ்ட், 'தென்னிந்திய புக் இண்டஸ்ட்ரி கவுன்சி'லுடன் சேர்ந்து இரு கருத்தரங்குகளை நடத்தியது. இவற்றில் முதல் அரங்கு 1957ஆம் ஆண்டு சென்னையில் 'புத்தக வியாபாரத் துறையின் பிரச்சினைகள்' என்ற தலைப்பைக் குறித்தும், இரண்டாவது அரங்கு 1958ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் 'புத்தகத் தயாரிப்பு' என்ற தலைப்பைக் குறித்தும் நடத்தப் பட்டன. மற்றும், 'புத்தக விற்பனைப் பெருக்கமும் பங்கீடும்' என்ற தலைப்பில், இந்திய அரசினரின் உதவியுடன் 'யுனெஸ்கோ'வுக்காக 1959ஆம் ஆண்டு 'தென்-கிழக்கு ஆசியக் கருத்தரங்கு' என்ற மூன்றாவது கருத்தரங்கு ஒன்றும் நிகழ்த்தப்பட்டது. 'அச்சு முறை', 'மேலட்டை அமைப்பு' முதலிய பிரச்சினைகளைக் குறித்து இடைக்காலத் தொழிற்பள்ளிகள் நடத்தப் பட்டன. இவற்றின் காரணமாகச் சிறப்பான, கவர்ச்சியான மேலட்டையுடைய புத்தகங்களும், பொது அறிவுப் புத்தகங்களின் சீரிய பதிப்புக்களும் வெளியிடப்பட்டுள்ளன.

### விளக்கப் படம்

'புத்தகத்தின் கதை' (Pen to People) என்ற தலைப்பில் ஒரு விளக்கப் படத்தையும் (Documentary) டிரஸ்ட் தயாரித்துள்ளது. இந்தியாவிலேயே இது முதல் முயற்சி என்பதுடன், இது பொதுமக்களுக்குப் புத்தகத்தின் வரலாற்றைக் கற்பிப்பதற்கு மிகவும் சிறந்த வாயிலாகப் பயன்பட்டுள்ளது.

### ஆராய்ச்சியும் செய்திகளும்

'யுனெஸ்கோ'வின் சார்பில் இந்த டிரஸ்ட் படிக்கும் பழக்கங்கள், புத்தக வியாபாரத் துறை, வியாபாரப் பெருக்கம் முதலிய பிரச்சினைகளைக் குறித்து ஆராய்ச்சி நடத்தி உள்ளது. தமிழ்ச் சிறுவர்கள், பெண்கள் முதலியவர்களின் படிக்கும் பழக்கங்களைக் குறித்து அடிப்படை ஆராய்ச்சிகளையும் நடத்தி உள்ளது. மேலும், தென்னிந்தியாவில் பொதுவான படிக்கும் பழக்கங்களைக் குறித்து ஓர் ஆராய்ச்சியைத் தன் சார்பிலும் நிகழ்த்தி உள்ளது. இந்த ஆராய்ச்சிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை மேலும் நன்கு பயின்று ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஆர்வமுள்ள பொதுமக்களுக்கும், புத்தக வெளியீட்டுத்துறை, விற்பனைத் துறை முதலியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பயன்படக்கூடிய செய்திகளைக் கொடுப்பதற்கென ஒரு 'செய்தி நிலையத்தை'யும் அமைத்துள்ளது. புத்தக

உலகத்தின் ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் இடையே தொடர்பு உண்டாக்கும் நிலையமாக இது பணியாற்றுகின்றது.

இவ்வாறு, தென்மொழிப் புத்தக டிரஸ்ட் நாட்டிற்கு மிக முக்கியமான ஒரு கலைப் பணியில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக உணர்ச்சி ஒருமைப்பாடு, பண்பாட்டைத் திடப்படுத்தல் ஆகிய துறைகளை நோக்கி இப்பணி ஆற்றப்படுகிறது. இதன் பணி இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் மதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## இந்தப் பத்திரிகை

'புத்தக நண்பன்' தென் மொழிப் புத்தக டிரஸ்டின் பத்திரிகை ஆகும். புத்தகங்களில் ஈடுபாடுள்ளவர்க்கும், படிப்பதில் ஆர்வம் உள்ளவர்க்கும் பணி புரிவதே இதன் நோக்கம். டிரஸ்டின் செய்தி நிலையம் சேகரித்த பயனுள்ள செய்திகளையும், அவற்றைக் குறித்த தன் முடிவுகளையும் வெளியிடும் வாயிலாக இப்பத்திரிகை பயன்படும். 'புத்தக நண்பன்' தத்துவப் பிரசாரப் பத்திரிகை அல்ல. ஒரு சிலருக்கு மட்டும் உதவக்கூடிய சீரிய அறிவைப் பரப்புதலோ, உயர்தனி அறிவியல் வளர்ச்சியோ அதன் நோக்கங்கள் அல்ல; ஆனால் பண்பாட்டைப் பரப்புதலும், எல்லார்க்கும் உதவக்கூடிய கல்வியைப் பரப்புதலும் இதன் குறிக்கோள்கள் ஆகும். இலட்சியங்களை விவாதிப்பது இதன் நோக்கமல்ல; எனினும் இது கோட்பாடோ, திட்டமோ பெருமலில்லை. எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், அல்லது ஓவியருக்கு, வெளியீட்டாளர், விற்பனையாளர், அச்சகத்தார் முதலியவர்களைக் குறித்த செய்திகளையும்; அச்சகத்தார், பதிப்பகத்தார், விற்பனையாளர் முதலியவர்க்கு எழுத்தாளர், ஓவியர்களைக் குறித்த செய்திகளையும் கொடுத்து உதவுவது இதன் முக்கிய நோக்கமாகும். இவ்வகையில் புத்தக உலகத்தின் இருவேறு பிரிவுகளுக்கிடையே தொடர்புண்டாக்கும் சாதனமாக இது பயனுள்ள பணியாற்ற விழைகின்றது.

'புத்தக நண்பன்' மூன்று திங்கட்கு ஒருமுறை நான்கு தென்னிந்திய மொழிகளிலும் வெளிவரும்; ஒவ்வொரு மொழியிலும் இதற்கு இணையான பெயரைத் தாங்கிவரும். அமைப்பிலும், கருத்தளவிலும் பின்வரும் இதழ்களுக்கு முன்மாதிரியாக இந்த முதல் இதழ் அமைந்துள்ளது. இதன் ஒரு பகுதி மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரைகளையும், மற்றொரு பகுதி தமிழ்ப் பத்திரிகைக்கென வரையப்பட்ட தனிப்பட்ட கட்டுரைகளையும் தாங்கி இருப்பதைக் காணலாம். மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் நான்கு மொழிப் பத்திரிகைகளுக்கும் பொதுவானவை ஆகும்.

தொடர்ந்து வரும் சில அம்சங்கள் :

1. புத்தக உலகத் தொடர்புள்ள, அவ்வப்பொழுது நிகழும் முக்கிய சம்பவங்களைக் குறித்த செய்திக் குறிப்புக்கள் ;

2. ஒவ்வொரு மொழிப் பத்திரிகையிலும் மற்ற மூன்று மொழிகளில் திறன்மிக்க எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தும் பகுதி ;

3. புத்தகத் தயாரிப்பு, வெளியிடுதல், பங்கீடு முதலிய பல்வேறு துறைகளைப் பற்றிய மூலக் கட்டுரைகளும், மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் ;

4. அண்மையில் வெளியிடப்பட்ட புத்தகங்களின் விமர்சனங்கள், அண்மையில் வெளிவந்த புத்தகங்களின் பட்டியல் முதலியன.

நாங்கள் பேரவாக் கொண்டில்லை; பணிவுடன் கூடிய நிலையில் இதைத் துவக்குவதில் நாங்கள் திருப்தி அடைகிறோம். புத்தக வியாபாரத் துறையில் உள்ளவர்கள், படிக்கும் பொதுமக்கள் முதலியவர்களின் ஒத்துழைப்புடன் புத்தகப் பிரியர் யாவர்க்கும் தகுந்ததொரு ஊடகமாகப் பயன்பட்டு, பண்பாட்டைப் பரப்பும் பொதுச்சாதனையாக இப்பத்திரிகை சிறுகச் சிறுக வளரப் பாடுபடுவோம்.

---

## உங்களுக்குத் தெரியுமா?

1. பெரும்பாலான பெண்கள் இளமைப் பருவத்தில் படிக்கும் பழக்கத்தைத் துவக்கி, இருபதுக்குமேல் அதிகமாகப் படிப்பதில் ஈடுபட்டு, முப்பதுக்கு மேல் சற்றுக் குறைத்து, நாற்பதுக்குமேல் சற்று அதிகரித்து, இறுதியில் ஐம்பதுக்குமேல் மிகவும் குறைத்துவிடுகின்றனர்.

2. பெண்களில் 23 சதவிகிதத்தினர் புத்தகத்தின் தோற்ற அழகினுல் வாங்கும்படி தூண்டப்படுகின்றனர்.

3. பெண்களில் 50 சதவிகிதத்துக்கு மேற்பட்டவர் ஆசிரியர் பெயரைக் கொண்டு புத்தகத்தை வாங்குகின்றனர்.

4. ஒரு பெண் சாதாரணமாக ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் வீதம் படித்து ஒரு புத்தகத்தை ஒரு வாரத்தில் முடிக்கிருள்.

5. சாதாரணச் சிறுவர் தடித்த அட்டையிட்ட புத்தகத்தையே விரும்புகின்றனர்.

6. சிறுகுழந்தைகள், சுமார் 32 பக்கங்கட்குக் குறைவான சிறிய நூல்களையே விரும்புகின்றனர் ; மற்றும், அச்சிட்ட தாள்களில் பெரிய எழுத்துக்களையே விரும்புகின்றனர்.

## எங்களின் புதிய வெளியீடுகள்

| இலக்கியம், கட்டுரைகள் | ரூ. |
|---|---|
| இந்தியப் பெரியார்கள்—டாக்டர் ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் | 3·00 |
| வளரும் சக்தி—சி. சுப்ரமண்யம் | 3·00 |
| சாதனைக்குரிய சிந்தனைகள் ,, | 2·50 |
| தமிழால் முடியும் ,, | 2·50 |
| சொல்லின் செல்வம் —நா. பார்த்தசாரதி | 5·00 |
| மொழியின் வழியே ,, | 2·50 |
| கவிதைக் கலை ,, | 2·50 |
| பண்டைத்தமிழர் போர் நெறி —கா. கோவிந்தன் | 5·00 |

| நாவல்கள், சிறு கதைகள் | ரூ. |
|---|---|
| வெற்றி முழக்கம் —நா. பார்த்தசாரதி | 7·50 |
| பட்டுப் பூச்சி ,, | 6·00 |
| வேனில் மலர்கள் ,, | 3·00 |
| பொற்காலப் பூம்பாவை —கோவி. மணிசேகரன் | 7·50 |
| நீல மல்லிகை ,, | 6·00 |
| பூந்தாது ,, | 2·50 |

**வள்ளுவர் பண்ணை**

புத்தகம் வெளியிடுவோர், விற்பனையாளர்

**137, பிராட்வே, சென்னை-1.**



Phone No. 24709

*With best compliments*

*from*

**RANGOON PAPER STORES**

**No. 4, ANDERSON STREET,**

**MADRAS-I.**



*PLEASE CONTACT*

for

all kinds of Printing Work

**KUBERA PRESS**

PRINTERS OF REPUTE

**21, SUNKURAMA CHETTY STREET,**

**MADRAS-I.**

(Contractors to Government and Banks)

Tri-colour printing a Speciality

Phone: 23006

# செய்திக் குறிப்புக்கள்

புது டில்லியில் 'சாஹித்ய அகாடமி'யும் 'இந்தியன் கவுன்சில் ஆஃப் கல்சுரல் ரிலேஷன்ஸ்' இரண்டும் கூடி அகில உலக இலக்கிய ஆய்வுக் கூட்டத்தை நடத்தினர். இக் கூட்டம் தாகூரின் நூற்ருண்டு விழாவின் ஒரு பிரிவாகக் கொண்டாடப்பட்டது. மற்றப் பல்வேறு பிரச்சினைகளுக்கிடையே, இன்றைய உலகத்தில் எழுத்தாளரின் பங்கைக் குறித்து விவாதிக்கப்பட்டது. 'இலக்கியமும் வாழ்க்கையும்' என்ற தலைப்பில் ஆல்டஸ் ஹக்ச்லி வாசித்தளித்து விவாதிக்கப்பட்ட கட்டுரை குறிப்பிடத்தக்கது. இன்றைய உலகத்தில் முன்னேறும் பொறியியலின் விளைவுகளைக் குறித்து அதில் விரிவாக விளக்கப்பட்டது. இக்காலத்திய தயாரிப்பு, பங்கீட்டு முறைகளால் தோன்றும் மனோதத்துவ விளைவுகளை அவர் குறிப்பிட்டார். "பெருவாரியான மக்கள் இன்று மனிதனுல் உண்டாக்கப்பட்ட சூழ்நிலையிலேயே வாழ்கின்றனர். இலட்சக்கணக்கான நம் குழந்தைகள் ஒரு பழ மரத்தையோ, ஒரு வயலையோ கண்டதே இல்லை!" என்று அவர் குறிப்பிட்டார். மேலும் தொடர்ந்து, "மக்களுடைய அனுபவங்கள் குறுகிக்கொண்டே வருகின்றன. தற்காலத்திய நகரத்தில் வாழ்பவர்கள் சற்றும் தணியாத பயங்கரச் சூழ்நிலையிலேயே காலத்தைக் கழிக்கின்றனர்; மனதுக்கு இன்பத்தைத் தரும் பிறவற்றுடன் பெறும் தொடர்புகளே அவர்களுக்கு இருப்பதில்லை; மற்றும் கவிஞர் வோர்ட்ஸ்வர்த் குறிப்பிட்ட 'இயற்கைப் பற்று'-அதாவது, இயற்கையின் இரகசியங்களுடன் இரண்டறக் கலக்கும் வாய்ப்பே இல்லாமல் இருக்கின்றனர்" என்று கூறினுர்.

இந்தக் கூட்டத்தின் இறுதி நாளன்று உரையாற்றிய டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், தங்களைச் சுற்றி நிகழ்ந்துகொண்டிருக்கும் மாற்றங்களுக்கேற்ப தாமும் இயங்குவதுடன், மக்கட் சமுதாயத்துக்கு ஏற்ற வகையில் மகிழ்ச்சிகரமானதாக உலகத்தை மாற்றி அமைப்பது எழுத்தாளர்களின் இன்றியமையாத கடமையாகும் என்று குறிப்பிட்டார். உலகத்தில் ஒற்றுமை இருக்க வேண்டுமெனில், தங்களுடைய கருத்துக்களைப் பிறர்மீது வலிந்து திணிப்பதற்கு ஒருவரும் விரும்பக்கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினுர்.

* * *

பம்பாயில் அகில-இந்திய எழுத்தாளர் மகாநாட்டைத் துவக்கி வைத்த பொழுது இந்தியாவின் துணைத்தலைவர் குறிப்பிட்டதாவது: உயர்ந்த இலக்கியத்தின் பொதுக் கொள்கை மக்களின் இதயங்களில் அவர்களை அறியாமலேயே மனிதாபிமானத்தை அறிவுறுத்தி, செருக்கினைக் குறைத்து, அடக்கத்தினை ஊட்டுவதுடன், "நம் கடமை மதிப்பிடுவதல்ல; புரிந்து கொள்வதே ஆகும்" என்ற உண்மையை உணர்த்துவதாகும். பகைமை, கோபம், வெறுப்பு முதலிய உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கும் முறையிலேயே பல இலக்கியங்கள் உள்ளன என்றும், ஆனுல், இலக்கியத்தின் உயர்ந்த நோக்கம் மக்களுக்கு உயர்ந்த மனப்பான்மையை ஊட்டி, அவர்களின் முகத்துக்குச் சற்று அதிக அழகைத் தந்து, அவர் தம் அகத்துக்குச் சற்று அதிக மென்மையை ஈந்து, மனிதத் தன்மைக்கே மதிப்பைக் கொடுப்பதாகும். "இத்தகைய ஒரு நல்லெண்ணத்தை இலக்கியம் தருமாயின் அது தன் நோக்கத்தில் வெற்றி பெற்றது எனலாம். மனிதனுக்குத் துரோகம் விளைவிக்கும் எந்த இலக்கியமும் தனக்கே துரோகம் செய்கிறது என்பதுதான் பொருள்" என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினுர். மற்றும், சூழ்நிலைகள் மாறிக்கொண்டே

உள்ளன, மனிதன் அவற்றை அடக்கி ஆளும் திறமையைப் பெற வேண்டும் என்பதையும் எழுத்தாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறினர்.

* * *

சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரான டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், தேசிய புத்தக விழாவின் நிறை நாட் பேருரை ஆற்றினர். இப்புத்தக விழா தென்னிந்திய 'புக் இண்டஸ்ட்ரி கவுன்சிலால்' பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது பாடப் புத்தகங்களைத் தேசிய உரிமைப்படுத்துவதால் கல்வி நிலை குறைந்துவிடும் என்று அவர் குறிப்பிட்டார்.

* * *

பாடப் புத்தகங்களையும், உயர்தர நூல்களையும் தயாரித்தல், மொழிபெயர்த்து வெளியிடுதல் முதலியவற்றிற்கான திட்டமொன்றை இந்திய அரசாங்கம் தயாரித்துள்ளது. ஹிந்தியில் மட்டுமல்லாமல் பிற வட்டார மொழிகளிலும் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிடப்படும். ஆங்கிலத்திலிருந்து ஹிந்தி, மற்ற வட்டார மொழிகளுக்கு மாறும்பொழுது எளிதாக இருக்கவே இம்முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மற்றும், வட்டார மொழிகளில் தகுதி வாய்ந்த உயர்தர நூல்கள் பாடப் புத்தகங்கள் முதலியவற்றை அளித்தலும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்: (1) இதன் முழுச் செலவையும் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும், (2) இவற்றை விற்றுப் பெறப்படும் தொகை மேலும் இத்தகைய புத்தகங்களைத் தயாரித்து வெளியிடுதற்கென ஒதுக்கி வைக்கப்படும், (3) மூலப் புத்தகங்களை எழுதி அச்சடிப்பதும் ஏற்றுக் கொள்ளப்படும், (4) கல்வி அமைச்சுத் துறை தயாரித்த கலைச் சொற்களே இப்புத்தகங்களில் பயன்படுத்தப்படும்.

* * *

'அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் கிராபிக் ஆர்ட்ஸ்', 'ஸ்டேட் டிபார்மண்டி'ன் நிபுணர்களின் அமைப்பு—இரண்டும் சேர்ந்து தென் ஆசியாவிலும் மத்தியக் கிழக்கு நாடுகளிலும் அச்சுத் தொழிலில் உதவுவதற்கென ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளன. தென்மொழிப் புத்தக டிரஸ்டின் முன்னாள் தயாரிப்பு ஆலோசகராகப் பணியாற்றிய திரு. கிளிக் அவர்களும் திருமதி. கிளிக் அவர்களும் மலேயாவிலிருந்து துருக்கிவரை ஏழு மாத காலம் பிரயாணம் செய்து தொழில் துறையில் துணைபுரியும் பணியை ஏற்றுள்ளனர். ஒவ்வொரு இடத்திலும் அவர்கள், பதிப்பகத்தினர் அச்சகத்தினர், மற்றும் வரைப்படத் துறையில் ஈடுபாடுள்ள பலரையும் கண்டு பேசி, அங்கங்குள்ள அச்சு முறைகள், அவற்றில் காணப்படும் முன்னேற்றங்கள் முதலியவற்றை அறிந்து, அத்துறைகளில் எதிர்த்து வரும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய உதவி புரிவார்கள். இந்தியாவில் கல்கத்தா, புதுடில்லி, பம்பாய் முதலிய நகரங்களில் அவர்கள் தங்குவர். அவர்களுடைய பிரயாணத்தின்போது, 1962 ஜனவரியில் சென்னைக்கு விஜயம் செய்ய அவர்கள் திட்டமிட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

* * *

குழந்தைகளுக்கான புத்தகங்களை எழுதும் எழுத்தாளர்கள் கடந்த சில ஆண்டுகளாகப் பேரளவு தொண்டு செய்து வருகின்றனர். **சென்னையில்** அமைக்கப்பட்டுள்ள 'குழந்தை எழுத்தாளர்' சங்கம் குழந்தை இலக்கியத்தை வளர்ப்பதற்குப் பெரிதும் பாடுபட்டுள்ளது. இச்சங்கம் ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நவம்பர் 13 ஆம் நாள் அன்று ஒரு விழாவை ஏற்பாடு செய்து அவ்விழாவில் குழந்தைகளுக்கான சீரிய புத்தகங்களை வெளியிட்டு வந்துள்ளது. இந்த ஆண்டு செயிண்ட் மேரி மண்டபத்தில் நடைபெற்ற குழந்தை நூல் வெளியீட்டு விழாவில், மதிப்பிற்குரிய நீதிபதி திரு. ஆர். சதாசிவம் அவர்கள் 59 குழந்தை நூல்களை வெளி

யிட்டுச் சிறப்புறச் செய்தார். இந்த நூல்கள் 33 எழுத்தாளர்களால் எழுதப்பட்டு 17 பதிப்பகத்தாரால் பதிக்கப்பட்டன. இவ்விழாவில் பேசும்பொழுது திரு. சதாசிவம் அவர்கள் குழந்தை நூல்கள் குழந்தைகளுக்குரிய எளிய நடையில் எழுதப்பட வேண்டும் என்றும், ஆயின் அதே நேரத்தில் குழந்தைகளுக்கு உயர்ந்த கோட்பாடுகளை அறிவுறுத்துவனவாக இருக்க வேண்டும் என்றும் கூறினர்.

**ஹைதராபாத்தில்** ஆந்திர பிரதேஷ் புத்தக டிஸ்டிரிப்யூடர்ஸ் (ஏபிபிடி) குழந்தைப் புத்தக விழா ஒன்று ஏற்பாடு செய்து அதில் குழந்தை இலக்கியக் கண்காட்சி ஒன்றையும் அமைத்திருந்தனர். அந்த விழாவின் இறுதி நாளன்று (நவ-14) ஏபிபிடி பதிப்பித்த 7 குழந்தை நூல்களை, ஆந்திர முதலமைச்சர் திரு. சஞ்சீவைய்யா வெளியிட்டார். அவ்விழாவில், பெயர்பெற்ற தெலுங்குக் கவிஞர் திரு. தாசரதி உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். திரு. தாசரதி பேசுகையில் கவர்ச்சியான படங்களுள்ள குழந்தை நூல்களின் அவசியத்தை அறிவுறுத்தினர்.

இவ்வாண்டு, குழந்தைகள் தினத்தன்று, **கோட்டயத்தில்** ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில், 12 மலையாளக் குழந்தை நூல்கள் வெளியிடப்பட்டன. இவை சாஹித்ய ப்ரவர்த்தக கோ-ஆபரேடிவ் சொஸைடி லிமிடட் கம்பனியாரால் பதிப்பிக்கப்பட்டவை. அவ்விழாவில், கட்டுரைப் போட்டி முதலான போட்டிகளில் வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

அண்மையில் கன்னட மொழியிலும் பல குழந்தைப் புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

* * *

தென்னிந்திய புத்தக உலகத்தில் எழுத்தாளர்களின் கூட்டுறவு அமைப்புக்கள் புதுமையான அம்சங்களாகும். இத்துறையில் முன்னேடியாக விளங்கும் கேரளா பாராட்டத்தக்கது. அங்குப் பணியாற்றும் 'சாஹித்ய ப்ரவர்த்தக கோ-ஆபரேடிவ் சொஸைடி லிமிடெட்' (எஸ் பி சி எஸ்) இந்தியாவிலேயே முதன்மையானது எனலாம். கோட்டயத்தில் 1945 ஆம் ஆண்டு சாதாரண நிலையில் துவக்கப்பட்ட இக்கூட்டுறவு அமைப்பு, இன்று கேரளாவிலேயே தலைமையான கூட்டுறவு அமைப்பு என்றும், இந்தியாவில் தலைசிறந்த 11 கூட்டுறவு அமைப்புக்களில் ஒன்று என்றும் கருதப்படுகிறது. எழுத்தாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கென்று இது துவக்கப்பட்டது. எழுத்தாளர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தருவதும், பொதுவாக எழுத்தாளர்களின் நலனை முன்னேற்றுவதும், குறிப்பாகப் பணியாற்ற இயலாத நிலையில் உள்ள எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கு உதவி செய்வதும் இதன் நோக்கங்களில் சிலவாகும். 'எஸ்பிசிஎஸ்'சின் முக்கிய அம்சம் என்னவெனில், அதில் அங்கத்தினராக உள்ள எழுத்தாளர் எழுதும் புத்தகத்திற்கு 30 சத வீதம் வரை ராயல்டி (Royalty) பெறுகின்றனர். உலகிலேயே இந்த வீதம் மிக அதிகமானது என்று கருதப்படுகிறது.

* * *

'யுனெஸ்கோ'வின் படிக்கும் பொருள்கள் சம்பந்தமான நான்காவது கருத்தரங்கு கொழும்பு நகரில் உள்ள ராயல் கல்லூரி மண்டபத்தில் துவக்கப்பெற்றது. தென்மொழிப் புத்தக டிரஸ்டும் இதில் கலந்து கொண்டது. தென்மொழிப் புத்தக டிரஸ்டில் குழந்தைப் புத்தகங்களுக்குப் பிரத்யேக அலுவலாளராகப் பணியாற்றும் திரு. அழ. வள்ளியப்பா அவர்கள் இந்திய நூலாசிரியரின் பிரதிநிதியாக இந்தக் கருத்தரங்கில் பங்கு கொண்டார். இலங்கை அரசாங்கத்தில் தொழில்துறை, உள் விவகாரம், கலைத்துறை அமைச்சராகப் பணியாற்றும் திரு. மைத்ரிபாலா சேனநுயகே துவக்கி வைத்த இந்த மகாநாடு மூன்று வாரங்கள் நடைபெற்று 1961 டிசம்பர் 16 ஆம் நாள் முடிவுற்றது. இந்த மகாநாட்டைத் துவக்கி வைக்கும்பொழுது திரு. மைத்ரிபாலா அவர்கள், துவக்க காலத்திலிருந்தே 'யுனெஸ்கோ' பல புதிய திட்டங்களை உருவாக்கியுள்ளது என்றும், அத்திட்டங்கள் கல்வி, கலை முதலிய துறைகளை நாட்டு எல்லையிலிருந்து

விடுவித்து அகில உலக ரீதியில் கொண்டு சென்றுள்ளது என்றும் கூறினர். கல்வி நிபுணர்கள் மற்றும் அரசினரின் பேரவா, நூற்றுக்கு நூறு படித்தவர்களாக மக்களை மாற்றுவதே என்றும், மக்களுடன் பெரு வாரியாகத் தொடர்புகொள்ள வாய்ப்புத் தோன்றியுள்ள இக்காலத்தில் அவ்வாய்ப்பினைக் கல்வித்துறைக்குப் பயன்படுத்தினால் அந்த ஆசை நிறைவேறுவது திண்ணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு நகரில் நடைபெற்ற யுனெஸ்கோ கருத்தரங்கில் பிரதிநிதிகள்: வலப்புறமிருந்து இடப் பக்கமாக வீற்றிருப்பவர்கள் இந்தியப் பிரதிநிதிகள் திரு. ஜே. மிட்டில்டன், திரு. அழ. வள்ளியப்பா, திரு. ஜி. டி. ஸ்தலெகர்.


ஜெமினியின் சிறந்த நூல்கள்

## 'இன்குலாப்'

மூலம்: கே. ஏ. அப்பாஸ். தமிழாக்கம்: எம். ஏ. அப்பாஸ்.

★ இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பின்னணியாகக்கொண்ட மகத்தான முதல் நாவல்! ஜெர்மன், ரஷ்யன், செக் முதலிய பல உலக மொழிகளில் வெளியிடப்பட்டு கோடிக்கணக்கான மக்கள் படித்து மகிழ்ந்த ஒப்பற்ற நவீனம்!

விலை ரூபாய் 7-00

| | ரூ. |
|---|---|
| ஒரே இரத்தம் (நாவல்) எம். ஏ. அப்பாஸ் | 5-00 |
| உலகப் புகழ்பெற்ற நாவல்களும்—நாவலாசிரியர்களும் எம். ஏ. அப்பாஸ் | 2-00 |
| உதய சந்திரன் (வரலாற்று நவீனம்) விக்கிரமன் எழுதியது | 4-00 |
| விசை வாத்து (சிறு கதைகள்) தி. ஜ. ர. எழுதியது | 2-00 |

**நாடகங்கள்:**

| | ரூ. |
|---|---|
| வாழத்தான் வேண்டும் மாஜினி எழுதியது | 1-75 |
| கள்ளத்தோணி—எம்.ஏ. அப்பாஸ் | 2-50 |
| கலையின் விலை ,, | 1-50 |

**கதைகள்:**

| | |
|---|---|
| தெய்வங்கள் எம். ஏ. அப்பாஸ் | 2-00 |
| பாகிஸ்தான் கதைகள் ,, | 2-50 |

விவரமான இலவச விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்:

**ஜெமினி பிரசுரம்,**

எல்லையம்மன் காலனி :: சென்னை-6.

# புத்தகம் வேண்டும்

**ஆர்தர் ஐசன்பர்க்**

அண்மையில் ஒரு கணக்கெடுப்பின் போது, ஆந்திர நாட்டுப் பெற்ருேர்கள், "உங்கள் குழந்தைகள் நன்கு படிக்கும் பழக்கத்தை வளர்ப்பதை நீங்கள் விரும்புவீர்களா?" என்று (தெலுங்கில்) கேட்கப் பட்டார்கள். கிட்டத்தட்ட 300 பெற்ருேர்கள் அந்தக் கேள்வித் தாளில் பதிலெழுதி, அவர்களுடைய செலவிலேயே கணக்கெடுப்பின் அமைப்பாளர்களுக்கு அனுப்பும் சிரமத்தை எடுத்துக்கொண்டார்கள்.

மேற்கண்ட கேள்விக்கு 99·8 சதவிகிதம் பேர் விரும்புவதாகப் பதிலளித்தனர்.

இதில் கலந்துகொண்ட ஆந்திரப் பெற்ருேர்கள் மிகப் பணக்காரர்களுமல்ல; பெரிய நகரங்களில் வாழ்பவர்கள் மட்டுமல்ல; அவர்களுடைய சராசரி மாத வருமானம் ரூ. 200க்கும் குறைவானதே, மற்றும் அவர்களில் அறுபது சதவீதம் பேர் கிராமங்களில் வாழ்பவராவர். 16 வயது இளைஞர் முதல் 76 வயது முதியவர் வரை பல்வேறு வயதினரும் அதில் அடங்கி இருந்தனர்.

இந்தப் பதிலைக் குறித்து நாம் என்ன நினைப்பது? ஒன்று, அர்த்தமற்ற ஓர் இலட்சியத்தில் அதிக நம்பிக்கை வைத்திருப்பதாக மக்கள் உதட்டளவில் ஏதோ சொல்கின்றனர் என்று ஒதுக்கிவிட வேண்டும்; அல்லது, **தம் குழந்தைகள் புத்தக உலகத்தில் அழியாத, உண்மையான ஈடுபாட்டை வளர்க்க வேண்டும் என்று ஆந்திர நாட்டுப் பெற்ருேர்கள் விரும்புவதாக** முடிவு செய்ய வேண்டும்.

அதிர்ஷ்டவசமாக, இரண்டாவது கருத்தே சரியானது என்று நிரூபிக்கச் சிறந்த சாட்சியம் இருக்கிறது. ஏனெனில், அதே பெற்ருேர்கள்—அவர்களில் கிட்டத்தட்ட 90 சதவீதம் பேர், தங்கள் குழந்தைகளுக்குத் தக்க புத்தகங்களைக் கொடுக்கும் ஒரு திட்டத்தில் சேர ரூ. 1.50 லிருந்து ரூ. 5 வரை மாதச் சந்தா செலுத்த தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

எதிலும் சரிவர நம்பிக்கை இல்லாத ஒருவன் இன்னமும் சந்தேகம் நீங்காமலேதான் இருப்பான். "இந்தப் பெற்ருேர்கள் ஏதோ **சொல்லிவிட்டார்கள்**. ஆனல் உண்மையில் அதையே **செய்வார்கள்** என்பது என்ன நிச்சயம்" என்று அவர்கள் வாதிடுவார்கள். ஆனல் அப்படி அவர்கள் வாதிட்டால் தோல்வியைத்தான் காண வேண்டும்.

சென்ற ஆண்டு மே மாத துவக்கத்தில் 'ஆந்திர பிரதேஷ் புக் டிஸ்ட்ரிப்யூடர்ஸ்' (ஏபிபிடி) என்ற பெயருள்ள ஒரு புத்தக விநியோகம் செய்யும் நிலையம், தெலுங்கு வாசகர்க்கு ஒரு புது திட்டத்தைத் தந்தது. (சாஹித்ய ப்ரவர்த்தக கோஆபரேடிவ் பிரைவேட் லிமிடெட்) கேரளாவில் முதலில் துவக்கிய ஒரு திட்டத்தைச் சற்று மாற்றி, 'ஏபிபிடி' ஆந்திராவின் படித்த மக்களை ஒரு 'வீட்டு நூல் நிலைய திட்டத்'திற்குச் சந்தா செலுத்துமாறு வேண்டிக்கொண்டது.

இந்தத் திட்டத்தின்படி, சந்தாதாரர்கள் மாதம் ரூ. 5 வீதம் 18 மாதங்கள் செலுத்துகின்றனர்—அதாவது மொத்தம் ரூ. 90 செலுத்துகின்றனர். இந்தத் தொகைக்கு ஈடாக, அவர்கள் 1500 தெலுங்குப் புத்தகங்களிலிருந்து ரூ. 100 மதிப்புள்ள புத்தகங்களைத் தேர்ந்து எடுத்துக்கொள்ளலாம்; அவற்றுடன் 9 புத்தகங்கள் **வெகுமதியாகப்** பெறுவர்; மேலும் 'புஸ்தக பிரபஞ்சம்' என்ற இலக்கியப் பத்திரிகையின் 18 தொடர்ச்சியான இதழ்களைப் பெறுவர். மற்றுமோர் சலுகை. பார்சல் கட்டணங்கள், தபால் கட்டணங்கள் முதலியவற்றுக்காக வாசகர்கள் செலவு செய்ய வேண்டியதில்லை.

இதுதான் 'ஏபிபிடி'யின் 'வீட்டு நூல் நிலையத் திட்டத்'தின் சுருக்கம்.

இந்தத் திட்டத்தின் கீழ் வீட்டு நூல் நிலையம் அமைத்துக்கொள்ள எத்தனை தெலுங்கு வாசகர்கள் முன்வருவர்?

இதைக் குறித்த 'அனுபவசாலி'களின் கூற்று இன்னும் என் நினைவில் உள்ளது. அவர்களில், மிகவும் நம்பிக்கையுள்ளவர்கள் 500 சந்தாதாரர்களுக்குமேல் எதிர்பார்க்க முடியாது என்று திட்டத்தின் அமைப்பாளர்களிடம் கூறினர். ஏன் இந்தக் குறைந்த எண்ணிக்கை? 'அனுபவசாலி'களின் பதில் இதுதான்: ஆந்திர மக்களுக்குப் புத்தகங்களில் ஈடுபாடு கிடையாது. படக் காட்சிகளில் ஈடுபாடு உண்டு; பத்திரிகைகளில் ஓரளவு இருக்கலாம்—ஆனால், புத்தகங்களிலோ நிச்சயமாக அவர்களுக்கு ஈடுபாடு கிடையாதாம்.

இதுவரை வீட்டு நூல் நிலையத் திட்டம் 4000 சந்தாதாரர்களை ஈர்த்துள்ளது—நாள்தோறும் எண்ணிக்கை வளர்ந்து வருகின்றது. இத்திட்டத்தின்படி 75,000க்கும் அதிகமான தெலுங்குப் புத்தகங்கள் சந்தாதாரர்களின் இல்லங்களில் குடியேறியுள்ளன. வாரந்தோறும் 1000க்கு மேற்பட்ட நூல்கள் குடியேறிக்கொண்டே உள்ளன.

முன்னற் கண்ட அக்கணக்கெடுப்பு சந்தாதாரர்களின் தொழில்களைப் பற்றியும் ஓரளவு தெரிவிக்கின்றது: கிட்டத்தட்ட 20 சதவீதம் மாணவர்கள், 11 சதவீதம் ஆசிரியர்கள், 13 சதவீதம் குமாஸ்தாக்கள், மற்றொரு 12 சதவீதம் வியாபாரிகள், 10 சதவீதத்துக்கு மேற்பட்டவர் குடியானவர்கள், டாக்டர்கள், வக்கீல்கள், என்ஜினியர்கள், மற்ற தொழில் வல்லுநர்கள் 6 சத வீதமாவர்; தேர்ச்சியுற்ற தொழிலாளிகள், 'வெள்ளாடை அலுவலர்'கள் 5.3 சதவீதமாவர். மீதமுள்ள சந்தாதாரர்களில் அனுபவம் நிறைந்த அரசாங்க அலுவலர் 4.1 சதவீதமாவர்; விஞ்ஞான-பொறியியல் துறையினர் 3.6 சதவீதமாவர், மீதம் தேர்ச்சியுறாத தொழிலாளர், ஓய்வு பெற்றவர், வேலையற்றவர்களும் இருந்தனர்.

அவர்களுடைய தொழில்களைப் பார்த்தால் அவர்களில் சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் உள்ளனர் என்பது தெளிவாகும். அவர்களிடையே எத்தனை வேறுபாடுகள் இருப்பினும், புத்தகங்களில் உள்ள ஆர்வம் என்ற ஒரு துறையில் மட்டும் ஒத்திருக்கின்றனர்.

இவையெல்லாம் திருப்திகரமாக இருப்பினும் ஒரு சந்தேகம் எழுகிறது: ஆந்திராவில் இத்தனை பேர் புத்தகங்களை விரும்புவது உண்மையெனில், பொதுவாகப் புத்தக விற்பனை ஏன் அவ்வளவு குறைவாக உள்ளது? இந்த வினாவிற்குச் சரியான விடை காண வேண்டுமெனில் இந்தக் கட்டுரை எல்லை கடந்து போய்விடும். இருப்பினும் ஒரு சிறப்பான உண்மை மட்டும் இதன் சம்மந்தமாகக் குறிப்பிட வேண்டும்.

வீட்டு நூல் நிலையத்துக்குச் சந்தா செலுத்தியவர்களில் ஐம்பது சத வீதம் பேர் இருந்த ஊர்களில் புத்தகக் கடைகளே இல்லை என்று அறிவித்தனர்; இருபத்தைந்து சத வீதம் பேர் இருந்த இடங்களிலிருந்து பத்து மைல் தூரம் வரை புத்தகக் கடையே இருக்கவில்லை. புத்தக வெறி கொண்ட நம்மில் எத்தனை பேர் பத்து மைல் சென்று பத்து மைல் திரும்பிவர—ஆக மொத்தம் இருபது மைல் கடந்து ஒரு புத்தகத்தை வாங்கி வருவோம்? ஒரு பெண் சந்தாதாரர் எழுதியது நமக்கு வியப்பைத் தராது என்று கருதுகிறேன்:

"இந்தச் சிறு கிராமத்தில், 'வீட்டு நூல் நிலையத்" திட்டத்தின்படி புத்தகக் கட்டு முதன் முறை வந்தபொழுது நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தேன் என்று நீங்கள் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. இருள்சூழ்ந்த என் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்தீர்கள்."

இருக்கிறதா என்பதே தெரியாத ஒரு புத்தகத்தை யார்தான் படிக்க முடியும்? அதே சமயத்தில், செயல் முறையில்

ஓரளவு முடியலாம் என்ருலும், கிராமத்தில் வாழும் படித்தவர்களின் பட்டியல்களை மிக வும் செலவு செய்து எந்தப் புத்தக வியா பாரியும் அல்லது பதிப்பகத்தாரும் தயார் செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடி யாது. முடிவில், நாட்டுப்புறத்தில் வாழும் படித்தவர்கள் அவர்கள் விரும்பும் புத்தகம் கிடைக்காமல் தொல்லைப்படுகின்றனர், பதிப் பகத்தாரும் புத்தக வியாபாரிகளும் புத்தக வியாபாரம் மந்தம் என்று வருந்துகின் றனர்.

இந்தப் பிரச்சினை ஒருவாறு தீர்க்கப்பட் டாலும், மற்ருெரு பெருந்தடை குறுக்கில் உள்ளது : அதுதான், ஓரிடத்திலிருந்து மற் ருேர் இடத்துக்குப் புத்தகங்களை அனுப்பு தற்கு ஆகும் பெருஞ் செலவாகும். ஒரு ரூபாய் விலையுள்ள ஒரு புத்தகத்தைப் பதிவு அஞ்சலில் அனுப்புவதற்கு ஆகும் செலவோ அதன் விலையை விட அதிக மாகப் போகிறது என்பது நாம் அறிந் ததே. (எனினும் 'வி. பி. பி.' மூலம் அனுப்புவதாயின் பதிவு அஞ்சலில்தான் அனுப்ப வேண்டியுள்ளது.) முன்னரே கண்டதுபோல், வீட்டு நூல் நிலையத் திட்டத் தின் ஒரு கவர்ச்சியான அம்சம் என்ன வெனில், புத்தகங்கள் அனுப்பப்படுவதற் குரிய தபால் கட்டணம் முதலிய செலவு களைச் சந்தாதாரர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அப்படியாளுல் இந்தத் திட்டத்தை நடத்துபவர்களுக்கு எப்படி கட்டுபடி ஆகிறது என்ற ஐயம் எழலாம். பெருவாரியான புத்தகங்கள் விற்பனையாவதால் இந்தச் செலவுகள் லாபத்தை அதிகமாகப் பாதிப்பதில்லை. மேலும், ஒவ்வொரு பொருளுக்கும் கிடைக் கும் சிறிதளவு லாபம் ஒன்று சேரும் பொழுது மொத்த எண்ணிக்கையில் தக்க அளவு லாபம் தருகிறது என்ற தத்துவத்தின் அடிப்படையில்தான் இத்திட்டம் அமைக்கப் பட்டுள்ளது : 'சிறு துளி பெரு வெள்ளம்' என்பதில் ஐயம் என்ன !

படிக்கும் பழக்கத்தைக் குறித்து மீண்டும் காண்போம். இந்தப் பழக்கத்தைப் பொறுத் தவரை, ஆந்திர நாட்டு மக்களுக்கும் இந்தி யாவின் மற்ற பகுதிகளில் வாழும் மக்களுக் கும் அதிக வேறுபாடு இல்லை. முதலி லிருந்து, தென்மொழிப் புத்த ட்ரஸ்டின் மனமுவந்த ஆதரவைப் பெற்றுள்ள வீட்டு நூல் நிலையத் திட்டம் போன்றவற்றின் விளைவாக ஒருண்மை கண்டுபிடிக்கப்பட் டது: **இந்திய மக்கள் புத்தகங்களை விரும்பு கின்றனர் என்பதில் துளியும் ஐயமில்லை.** அதோடு மட்டுமல்ல, கல்வித்துறையில் எடுத்துக்கொள்ளப்படும் பெரும் முயற்சி களின் விளைவாகக் கல்வி நாடுமுழுவதும் மேன்மேலும் பரவப்பரவ புத்தகங்களின் தேவை மேலும் பெருகும் என்று கூறுவ தற்கு அதிக ஆராய்ச்சி அறிவு தேவை யில்லை. இந்தத் துறையிலும், அதிக வேக மாகச் செல்பவரே போட்டியில் வெற்றி பெறுவர் என்பதில் சந்தேகமில்லை. இந்திய பதிப்பகத்தார், புத்தக வியாபாரிகள் முதலி யவர்களின் சாமர்த்தியம், விடாமுயற்சி, நம்பிக்கை, கூரிய நோக்கம், ஆகியவற்றை ஆந்திராவின் இந்தத் திட்டம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. கேரளா, சென்னை, மைசூர் மற்றும் வட இந்தியா முதலிய பகுதிகளிலிருந்தும் ஏராளமான சான்றுகள் தரமுடியும்.

அவர்களுடைய செயல்களின் மூலமாகப் பதிப்பகத்தாரும், புத்தக வியாபாரிகளும், நான் நினைத்ததுபோலவே, இந்திய நூல் நிலையத்துறையின் பெருந் தந்தையான திரு. எஸ். ஆர். ரங்கனுதன் கூற்று முற்றி லும் உண்மை என்பதை நிரூபித்துவிட் டார்கள் :

"இந்தியரின் படிக்கும் பழக்கத்துக்கு வசந்த காலம் பிறந்துள்ளது."

# கண் கவரும் புத்தகம்

இ. எச். கிளிக்—எம். பி. கிளிக்.

மக்களைப் போலவே புத்தகங்களும் நாள் தோறும் தோன்றிய வண்ணமுள்ளன. ஒரு குழந்தை பிறத்தலைப்போலவே ஒரு புத்தகம் வெளியிடப்படும்பொழுதும் அத்துடன் கூடவே நன்மைக்கும் தீமைக்கும் அடிப் படையான விதை விதைக்கப்படுகிறது. எப்படி மக்கள் தங்களை அறியாமலேயே பிறரை எப்பொழுதும் பாதித்தவண்ணம் உள்ளனரோ, அது போலவே புத்தகங்களும் மக்களின் உணர்ச்சிகளையும் சிந்தனையை யும் மாற்றி அமைக்கின்றன-மேலும் புதிய புத்தகங்களையும் தோற்றுவிக்கின்றன. இராமாயணம், பைபிள், உயிரினங்களின் தோற்றம் (Origin of Species), 'மூலதனம்' (Das Kapital) முதலிய நூல்களைக் குறித் துத் தோன்றியுள்ள உரைகள்தாம் எத்தனை எத்தனை!

புத்தகத்தின் தோற்றத்தைப் பற்றி விவா திக்கும் நாம் இந்த ஒன்றைக் குறித்து மட் டும் தவருக எண்ணிவிடக்கூடாது: மனித னின் புறத் தோற்றத்தைவிட அவனுடைய பண்புக் கூறுகளும் (genes) குணமும் எந்த அளவு மிக முக்கியமானவையோ, அது போலவே ஒரு புத்தகம் எவ்வாறு கண் ணுக்கு விருந்தாகிறது என்பதைவிட அது எந்த அளவு கருத்துக்கு விருந்தளிக்கிறது என்பதே முக்கியமானது. காலையில் நாம் கண்டுகளிக்கும் அரசியல் கேலிச் சித்தி ரத்தை உயர்ந்த தோற்பத்திரத்தில் அச்சிடு வது நல்லதா அல்லது திருக்குறளைச் செய்திக் காகிதத்தில் (News print) அச்சிடுவது ஏற் றதா? என்ற அர்த்தமற்ற ஒரு முடிவைக் காண வேண்டுமெனின், இரண்டாவதே ஏற்கத்தக்கது என்று கூறுவோம். ஒரு மனி தனுக்குத் தன்மதிப்பைத் தருவனவும், பிற ரிடம் உயர்ந்த மதிப்பைப் பெற்றுத் தருவன வும் ஆடைகளே எனினும் அவையே மனி தனை உருவாக்குகின்றன என்று கூற இயலாது.

ஆடை அணிபவன் தான் எவ்வாறு காட்சி அளிக்க வேண்டும் என்று விரும்பு கின்ருனே அதற்கேற்ப நெசவாளர்களும் தையற்காரர்களும் அவன் ஆடைகளை அமைத்துத் தருகின்றனர்; அதுபோன்றே ஒரு புத்தகத்தின் புறத் தோற்றத்தை உரு வாக்கும் பொறுப்பு அச்சிடுபவர், நூல் இணைப்பவர், வெளியிடுபவர் ஆகியவர்களைச் சார்ந்துள்ளது. கீழை நாடுகளிலும் சரி, மேல் நாடுகளிலும் சரி, பெரும்பாலான புத்தகங்கள் முன் கூட்டிய சிந்தனைக்குப் பின்னர் தயாரிக்கப்படுவதில்லை. கையெழுத் துப் பிரதிகள் (காலங் கடந்து) வருகின்றன; அச்சகத்தில் அந்த நேரத்தில் உள்ள அச்சுக்களைக் கோத்துவிடுகின்றனர். மனித ஞல் தயாரிக்கப்படுவது எதுவாயினும் அது குறையுள்ளதெனினும், தவருனதெனினும் ஓரளவு சிந்தனைக்குப் பின்னரே அது தயாரிக்கப்படுகிறது.

ஒரு புத்தகம் எந்த அளவு நீள அகலங் களைப் பெற்றிருக்க வேண்டும், எவ்வளவு தடிப்பாக இருக்க வேண்டும், எத்தனைப் பக்கங்களிருக்க வேண்டும், ஒவ்வொரு பக்கத்திலும் எத்தனை சொற்களிருக்க வேண் டும் முதலியவற்றை யாராவது ஒருவர் சொல்லத்தான் வேண்டும். நன்ருகத் திட்ட மிட்டிருக்கலாம், அல்லது குறையுடன் இருக்கலாம், அல்லது அரைகுறையாகச் சிந்திக்கப்பட்டிருக்கலாம்-என்ருலும் இந்த அளவுகளை யாராவது ஒருவர் குறித்தாக வேண்டும். கையெழுத்துப் பிரதியை அச்சுக் கோத்தலுக்கு அனுப்பும்பொழுது, 'முந்திய

புத்தகத்தைப் போல் செய்க' என்று சொல்லி அனுப்பினுலும் அந்த அளவுகள் குறிப்பாக உணர்த்தப்பட்டன அல்லவா ?

'புத்தகம் எவ்வாறு காட்சி அளிக்கிறது என்பது ஒரு முக்கிய பிரச்சினையா ?' என்ற வினு எழுவது இயற்கை. அருவருப்பாக இருப்பதைவிட அழகான முறையில் காட்சி அளிப்பதால் அதிகப் பிரதிகள் விற்பனை ஆகுமா ? அதை வாங்குபவர் அதிகப் பயன் பெறுவார்களா ? அது கூறும் கருத்து அல்லது கதை மேலும் சிறப்பாக விளக்கப்படுமா ?

நண்பர்களே இல்லாமல் ஏங்கி இருப்பவன், யார் கிடைத்தாலும் நண்பர்களாக்கிக் கொள்வான். ஆனுல் பெரும்பாலான மக்கள் காண்பவரைக் கவரும் முகத் தோற்றமும், நல்ல பழக்க வழக்கங்கள், எடுப்பான ஆடைகள் முதலியவற்றைப் பெற்றிருப்பவர்களேயே உற்ற நண்பர்களாக ஏற்றுக்கொள்கின்றனர். இப்புறத் தோற்றங்களை மக்கள் முடிந்த முடிவுகளாக ஏற்றுக்கொள்வதில்லை எனினும் மனம் விட்டுப் பழக அவை தேவை என்று கருதுகின்றனர். நல்ல தோற்றம் இல்லாதவர்கள் நம்முடன் பழகும் நேரத்தில் தம் தோற்றத்தைக் குறித்துக் கலக்கமடைவதால் அந்நேரத்தில் அவர்களுடன் நம்மால் சரளமாகப் பழக முடிவதில்லை. அது போலவே புத்தகங்களைப் பொறுத்தவரையிலும் நல்ல தோற்றமுள்ளவற்றையே நாம் அதிகமாக விரும்புகிறோம்.

பெரும்பாலான மக்கள் புத்தகங்களைத் தாங்கள் விரும்பும் முறையில் தங்களால் இயன்ற விலைக்குப் பெறமுடியுமா ? தற்போது இது ஓரளவு சாத்தியமானதே என்று நாங்கள் நினைக்கிறோம். காலம் செல்லச் செல்ல இது நிச்சயமாக நடைபெறும். ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இலக்கிய நூல்களை வெளியிடும் பதிப்பகத்தார், தங்கள் நூல்கள் மற்ற சாதாரண நூல்களைவிட நன்கு தோற்றமளிப்பதும், அழகான தனிப்பட்ட அமைப்புடைய நூல்களையே வெளியிடுவோர் என்ற பெயரைப் பெறுவதும் போட்டி மிக்க விற்பனைத் துறையில் தனிப்பட்ட பயன் தருவன என்பதை உணர்கின்றனர்.

இந்தியாவில் போதுமான அளவு நல்ல காகிதத்தைப் பெறுவது இப்பொழுது கடினமாகவே உள்ளது; ஆனுல், காகித வினியோகத்தை முன்னேற்றச் செய்வதன் முக்கியத்துவம் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தங்கள் பாடப் புத்தகங்களிலும், ஒரு நாளைக்குமேல் பயன்படுத்தப்படும் பிற புத்தகங்களிலும் நல்ல காகிதத்தையே பயன்படுத்த வேண்டும் என்று படிப்பவர்களும், கல்வித் துறையாளர்களும், பதிப்பகத்தாரும் வலியுறுத்துவார்களாயின் இந்த நிலை முன்னேறுவது திண்ணம். காகிதமும் ஒரு வகையான துணிதான். இந்தியர்கள் கவர்ச்சியான துணிகளை விரும்புவோர் என்பதுமட்டுமல்ல; அவற்றை உருவாக்குவதிலும் வல்லுநராவர். எந்தப் பட்டு அல்லது காதிக் கடையில் நுழைந்தாலும் இந்த உண்மை புலனுகும்.

நூல் நுவலும் கருத்துக்களை அச்சுக் கோவையைக் கொண்டு தயாரிக்கும்பொழுது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை நேர்த்தி, ஒழுங்கு, இனிய தோற்றம் முதலியவையே ஆகும். இவை சற்று அதிக கவனத்தால் பெறப்படுவனவே தவிர அதிகச் செலவு தேவைப்படுவன அல்ல. சரியான நேர்க் கோட்டமைப்பு, பக்கங்களில் அதிகச் சொற்களை இட்டுத் திணிக்காமலிருத்தல், படிப்பவர் கண்களுக்கு அலுப்பைத் தராத வகையில் ஒவ்வொரு வரிக்கும் இடையே இடைவெளி அமைத்தல், எந்த நேரத்தில் எழுத்துக்கள் சரிந்துவிடுமோ என்று படிப்பவர் மனத்தில் இனமறியாத ஒரு பயம் தோன்ருதிருக்க பக்கங்களின் ஓரங்களில் தாராளமாக இடைவெளி விடுதல் முதலிய சில முக்கியமானவற்றை இங்குக் குறிப்பிடலாம். எதுவும் மிகவும் அளவுக்கு மீறிய முயற்சி எடுத்து அமைக்க வேண்டும் என்ற அவசியமில்லை. புத்தகத்தின் அட்டை எளிமை, புதுமை, கவர்ச்சியான நிறங்கள்,

சரியான குறிப்புக்கள் முதலியவற்றைப் பெற்றுக் கண்ணை ஈர்க்கும்படியாக இருக்க வேண்டும். விலையுயர்ந்த பல நிற 'பிளாக்கு' கள் தேவை இல்லை. ஆனால் சிக்கனமான முறையில் வெளியிடக்கூடிய அட்டை அமைப்பை வரையும் ஓவியர்களின் ஒத்துழைப்பு தேவையானதாகும். ஒருவேளை, அச்சிடுவோர் இதுவரை உபயோகித்து வந்ததைவிடச் சிறிது விலை அதிகமான மையை உபயோகிக்க வேண்டி இருக்கும். எனினும் அச்சிடத் தேவைப்படும் பெருஞ் செலவில் இந்த அதிகரிப்பு ஒரு சிறு பகுதியே ஆகும். மேலும் புத்தகம் அட்டை இட்டு நன்கு இணைக்கப்படும்பொழுது, இப்புத்தகம் நீண்ட ஆயுளுடையது என்பதை நிரூபிக்க வேண்டுமெனில் சற்று உறுதியான இணைப்பு அட்டையை உபயோகிப்பது தேவையாகும்.

இந்தியர் நீண்ட காலமாக அறிந்திருப்பதைப்போல் எல்லாப் புத்தகங்களிலும் மிகச் சிறந்தது ஒருவரின் மூளை அல்லது நினைவே ஆகும். ஆனால், இன்றைய உலகின் பெரும் அறிவையெல்லாம் நிரப்பி வைக்கும் அளவிற்கு யாருடைய மூளையும் அவ்வளவு பெரியதாக இல்லை. எனவே இத்துறைக்கு நாம் நூலகங்களில் உள்ள புத்தகங்களையே நம்பி இருக்கிறோம். இந்தப் புதிய பத்திரிகைக்குப் பெயர் தேர்ந்தெடுக்கும்பொழுது; இன்றைய மனிதன் புத்தகங்களிடம் கொண்டுள்ள தொடர்பின் அடிப்படையை இதன் ஆசிரியர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

---


இலக்கியம், வரலாறு, நவீனம், அறிவு நூல் ஆகிய
துறைகளில் சிறந்த புத்தகங்களை வெளியிடும் ஸ்தாபனம்
மல்லிகைப் பதிப்பகம்.

★

**எங்கள் அரிய வெளியீடுகளில் சில :**

★ மகா வம்சம் ★ நாலடியார்—பழமொழி நானூறு
★ நாட்டியக் கலை ★ வாழ்வும் வளமும்
★ இந்திய நாகரிகம் ★ இரவும் பகலும்
★ நிழலாட்டம் ★ புத்தர் கதைகள்
★ காள மேகம் பாடல்கள் ★ உலகத்தின் கதை
★ அன்னை ★ முப்பது நாள் ★ ஆடப் பிறந்தவள்
★ அறிவு வளர்ச்சிக்கு ஆயிரம் விஷயங்கள்
★ ஏசுநாதர் கதைகள் ★ சுதந்திர நாடுகள்
★ அம்பிகா ★ துணை ★ பொன்மலர்
★ சமைப்பது எப்படி? ★ அறிவுக் கதைகள்

# மல்லிகைப் பதிப்பகம்

**2, ராஜாபாதர் தெரு,**
**தியாகராயநகர் : : சென்னை-17**

# புத்தக விற்பனை பெருக—
# சில ஆலோசனைகள்

**சதானந்த் பட்கல்**

மொத்த வியாபாரம் அல்லது சில்லரை வியாபாரம்-எதுவாயினும் அத்துறையில் ஈடு பட்டிருக்கும் ஒருவனுடைய மிக முக்கிய பிரச்சினை விற்பனை முன்னேற்றமே (பெருக்கம்) ஆகும். விலை நிர்ணயிப்பு, வியாபார சாதனைகள் போன்ற பல பிரச்சினைகளுடன் விற்பனை முன்னேற்றம் தொடர்பு பெற்றுள்ளது. விற்பனை முன்னேற்றத்தைக் குறித்து விரிவாகப் பார்ப்பதற்கு முன்னர் அதன் பொதுத் தத்துவத்தைக் குறித்து அறிய வேண்டும்.

ஒரு வியாபாரத்திலிருந்து மிக அதிகமான இலாபத்தை அடைவதே விற்பனை முன்னேற்றத்தின் குறிக்கோளாகும். விற்பனை முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதல், செயல்படுதல் முதலியவை யாவும் இந்தக் குறிக்கோளை நோக்கியே திருப்பப் படவேண்டும். எனினும், மிக அதிகமான விற்பனையே மிக அதிகமான இலாபத்தைத் தரும் என்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சரியாக இருக்காது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதிகப்படி இலாபம் என்று நாம் பார்க்கும் பொழுது, விற்பனை அளவையும் அந்த விற்பனை நடைபெற ஆன செலவையும் நாம் கணக்கிட வேண்டும். மேலும், விற்பது என்ற ஒன்றை மட்டுமல்லாமல் மற்றும் பலவற்றை விற்பனை முன்னேற்றம் தன்னிடத்து அடக்கியுள்ளது என்பதை நாம் இங்குக் கவனிக்க வேண்டும். விற்பனை முன்னேற்றத்துடன் தொடர்பு கொண்டுள்ள விளம்பரம், பிரசாரம் போன்ற சில பிரச்சினைகளைக் குறித்தும் இக்கட்டுரையில் காண்போம்.

### விற்பனை முன்னேற்றம்—விளக்கம்

நேர்முக விற்பனை, விளம்பரம், விற்பனை அளவைப் பெருக்குவதற்கான மற்ற பல்வேறு சாதனைகள் முதலியவற்றைப் பொறுத்தே விற்பனை முன்னேற்றம் நிகழும் என்பது மேற் போக்காகப் பார்ப்போர்க்குப் புலனுகும். ஒரு புத்தகக் கடையின் விற்பனை முன்னேற்றம் அக்கடையிலுள்ள ஒவ்வொருவருடைய கடமையுமாகும். நேர்முகவிற்பனை, விளம்பரம் ஆகிய இரண்டையும் இணைப்பதுடன், இரண்டிற்கும் உறுதுணையாக அமைந்து அவற்றை மேலும் பெருகச் செய்யும் சாதனைகளே விற்பனை முன்னேற்றத்தின்கண் அடங்கும். உதாரணமாகக் கண்காட்சிகள், கூட்டங்கள், புத்தக விழாக்கள், விளக்க உரைகள் முதலிய அன்றுட அலுவல்களுக்கு அப்பாற்பட்டவை விற்பனை முன்னேற்றத்திற்கு முக்கியமானவை எனலாம். ஆனல் இவை மட்டும்தான் விற்பனை முன்னேற்றத்துக்குரிய வழிகள் என்று கூற முடியாது. நேர்முக விற்பனை, விளம்பரம், பிரச்சாரம் முதலியனவும் விற்பனை முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவுவன. குறிப்பாகச் சில்லரை விற்பனையில், விற்பனை முன்னேற்றம் என்பது தொடர்ந்து வரும் பிரச்சினை ஆகும். எனவே அதற்குரிய முக்கியத்துவத்தை உணர்ந்து அதைத் தொடர்ந்து கவனித்து வரவேண்டுமே தவிர, இடை இடையே நிகழ்வது, அல்லது தற்செயலாக நிகழும் நிகழ்ச்சி என்று நாம் எண்ணுவது சரியாகாது.

தம் வாடிக்கைக்காரர்களுக்குத் தேவை தோன்றும் பொழுது அத்தேவைகளை நிறை செய்வதிலேயே புத்தகக் கடைகள் திருப்தி அடைய முடியாது. வாங்குபவர்களின் வரு கைக்காக எந்தப் புத்தகக் கடைக்காரனும் சாவதானமாகக் காத்துக் கொண்டிருக்க இயலாது. வாங்கக் கூடியவர்களையெல்லாம் அவன் தன் கடையை நோக்கி ஈர்க்க வேண் டும்; மேலும் நல்ல படிப்பாளிகளையும், புத்த கம் வாங்குபவர்களையும் வற்புறுத்திப் புதிய வாடிக்கைக்காரராக ஆக்க முயல வேண் டும். சின்னஞ்சிறிய அளவில் தோன்றிப் பல நாடுகளிலும், கண்டங்களிலும் பரவும் அளவுக்கு வளர்ந்துள்ள சில புத்தக நிலையங் களையும் நாம் பார்க்கத்தான் செய்கிறோம். திட்ட மிட்ட விற்பனை முன்னேற்றத்தின் மூலமாகவே ஒருவர் தம் விற்பனையை முதலில் தம் வட்டாரத்தில் நிலைப்படுத்தி, பின்னர் நாடு முழுவதும் பரப்பி, பிறகு வேற்று நாடுகளிலும் நிலைபெறச் செய்ய இயலும். நன்கு தொண்டு புரியவும், இலா பம் சம்பாதிக்கவும், விற்பனையை நன்கு பெருக்கவும் புத்தக விற்பனைத் துறையைப் போல வாய்ப்பளிக்கும் துறைகள் வேறு அதிகமில்லை.

### செயல் படுத்தும் முறைகள்

**வாங்கக் கூடியவர்களுக்குத் தங்கள் விற்பனை நிலையத்தைக் குறித்துத் தெரிவித்து அவர்கள் கவனத்தை ஈர்த்தல்; பின்னர் தங்கள் நிலையத் தில் வாங்கும்படியாகத் தூண்டி அவர்களுக்குத் துணை செய்தல்; ஒரு முறை அவர்கள் காட்டும் ஆதரவு எப்பொழுதும் நீடித்திருக்குமாறு செய் வதுடன் அவ்வப்பொழுது வரும் புதிய வெளி யீடுகளைக் குறித்து அறிவித்து அவர்கள் தொடர்பு எப்பொழுதும் நிலைத்திருக்குமாறு செய்தல் முதலியன புத்தக விற்பனை முன்னேற் றத்துக்கு மிக மிக இன்றியமையாதனவாகும்.**

இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற கையா ளப்படும் வழிகள் பலவாயினும், பழக்கத்தில் கொண்டு வரக்கூடிய சில முக்கியமான வற்றை மட்டும் இங்குக் காணலாம்: **(1) கடைஅமைப்பும் அலங்கரிப்பும் (2) விளம் பரம் (3) விற்பனையாளரின் திறமை (4) சிறப் பான விற்பனை விழாக்கள்** முதலியன அவற் றில் அடிப்படையானவை எனலாம்.

இனி, விற்பனை முன்னேற்றத்துக்குரிய இப் பல்வேறு வழிகளைக் குறித்து விரிவாகக் காண்போம்.

### கடை அமைப்பும் அலங்கரிப்பும்

சில்லரைத் துறையில் விற்பனையைப் பெருக்குவதற்குரிய ஒரு முக்கிய வழி, கடையின் வெளிப்புறத்தையும், உட்புறத்தை யும் நன்கு அமைப்பதாகும். குறிப்பாகப் புத்தகத் துறையில் செய்தித் தாளில் தரப் படும் விளம்பரங்களைவிட கடை அமைப்பே மிகவும் பயன் தரும். கடையின் வெளிப் புறத்தில் உள்ள கண்ணாடி ஜன்னல்களில் புத்தகங்களைக் கண்கவரும்படியாக அமைப் பது மிகவும் பயன்தரும். கடையின் விற்பனை யாளர் அனைவரின் ஒத்துழைப்பும் இதற்குத் தேவைப்படும். கடையின் அலங்கரிப்பைக் கண்டு புத்தகம் வாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் உள்ளே வருபவர்களை நன்கு வரவேற்று அவர்களைக் கட்டாயமாக வாங்குமாறு செய்யும் திறமை விற்பனையாள ரிடம் உள்ளது. உலகம் முழுவதும் உள்ள புத்தக விற்பனையாளர்கள் கடை அலங்கரிப் பின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்து அதற்கெனப் பல வழி வகைகளைக் கண்டுள் ளனர். கண்கவரும்படியான மேலுறைகளை யுடைய புத்தகங்கள் மட்டுமல்லாமல் விளம் பரத் தாள்கள், போஸ்டர்கள், அழகான புத்தக அலமாரிகள், கவர்ச்சியான பட்டியல் கள் முதலியனவும் இத்துறையில் மிகவும் பயன்படுவனவாகும். இவை அனைத்தையும் தக்க முறையில் விவேகத்துடன் பயன் படுத்தி ஒவ்வொரு புத்தகக் கடையும் நன்கு பயனடையலாம்.

### விளம்பரத்துறை

செய்தித்தாள்களில் தரப்படும் விளம்பரங் கள், புத்தகக் கடைகளைப் பொறுத்தவரை பெரும்பாலும் பயன் தருவதில்லை. அவற்றால் ஏதாவது பயன் இருக்குமெனில், அந்த வட்டாரத்தில் ஒரு நல்லெண்ணத்தை உண்டாக்கலாம். அவை நன்மதிப்புக்கெனத் தரப்படும் விளம்பரங்கள் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் புத்தகப் பட்டியல்கள், ஜாபிதாக்கள், பட்டி விளக்கங்கள் முதலியன புத்தக விற்பனையைப் பெயரளவில் பெருக்குகின்றன என்பதில் ஐயமில்லை. சிறிய புத்தகக் கடையாக இருப்பினும், பட்டியல்களை அனுப்புதல் பெரும் உதவி செய்யும். ஒரு குறிப்பிட்ட பட்டியலைக் கண்டுதான் ஒருவர் வாங்கினார் என்று திட்டவட்டமாகச்சொல்லிவிட முடியாது. பட்டியல்கள் உடனடியாகப் பயன் தரவில்லை எனினும் அதிகச் செலவில்லாத விளம்பரங்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

பட்டியல்கள் நன்கு பயன்படுமாறு அமைக்கப்பட வேண்டும்; இருப்பினும் அவற்றைத் தயாரிப்பதற்கு ஆகும் செலவைக் கூடியவரை குறைக்க வேண்டும். பட்டியல்களைத் தயாரித்து அனுப்பி அதிகப் பயனைப் பெறுவதற்குச் சில நல்ல வழிகள் உள்ளன. உதாரணமாக 16 பக்கங்களுள்ள ஒரு பெரிய பட்டியலை அனுப்புவதைவிட 8 பக்கங்களுள்ள இரு பட்டியல்களாக அனுப்புதல் நலம் பயக்கும். ஏனெனில், வாடிக்கைக்காரர்கள் இரு முறை நினைவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் ஒவ்வொரு பட்டியலிலும் தேவையான அளவு கவனம் செலுத்த முடியும். எனவே சிறந்த முறையில், கவர்ச்சியான பட்டியலைத் தனித்தன்மையுடன் தயாரிப்பது மிகவும் பயன் தரும்.

பட்டியலில் இடம் பெற வேண்டிய பெயர்களைக் கவனித்துச் சேர்க்க வேண்டும். மற்றும், அவற்றைக் காலமறிந்து அனுப்புவதும் மிகத் தேவையாகும். உதாரணமாக மக்களின் கவனத்தை ஈர்க்கும் மிகவும் பயங்கரப் பிரச்சினைகள் செய்தித்தாள்களில் வெளியாகிக் கொண்டிருக்கும் நேரத்தில் பட்டியல்களை அனுப்புவது கருதிய பயனைத் தராது. மாறாக ஒய்வு நாட்கள், சம்பளம் பெறுவதற்குச் சற்று முந்திய நாட்கள் முதலிய சமயங்களில் அனுப்புதல் அதிகப் பயன் தரும்.

பட்டியலுடன் எப்பொழுதும் தேவை அறிவிக்கும் தாளையும் இணைத்து அனுப்ப வேண்டும். வாங்க விரும்புபவர் அந்தத் தாளை நிரப்பி அதைத் தனியாகப் பிரித்து தபாலில் சேர்க்கக்கூடிய வசதியுடன் அனுப்பினால் மிகவும் நல்லது. பட்டியல்களில் ஒவ்வொரு புத்தகத்திற்கும் ஒரு வரிசை எண் கொடுக்கலாம். வாங்குபவர்கள் புத்தகத்தின் பெயருக்குப் பதிலாக அந்த எண்ணை மட்டும் குறிப்பிட்டனுப்ப இது வசதி அளிக்கும். பட்டியல் எந்த அளவு பயன் பட்டது என்று அறிய விரும்பினால் அதில் குறிக்கப்பட்டுள்ள புத்தகங்களின் விற்பனை அளவை அறிவது உதவி செய்யும். வாடிக்கைக்காரரில் பலர் அஞ்சல் மூலமாகவே புத்தகங்களைப் பெற முனையலாம். ஒவ்வொரு புத்தகக் கடையும் ஏதாவது ஒரு கட்டத்தில் அஞ்சல் மூலம் விற்பனைத் துறையைத் துவக்கியே ஆக வேண்டும். இத்துறையைப் பொறுத்தவரை, கடிதத் தொடர்புகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நிரப்பப்பட்ட தேவை அறிவிப்புத்தாள்கள் வந்து சேர்ந்தமையைத் தெரிவிப்பதுடன், புத்தகங்கள் எப்பொழுது அனுப்பப்படும், கைவசமில்லாத பிரதிகள் எப்பொழுது கிடைக்கும் என்பவற்றை உடனுக்குடன் தெரிவிப்பது அவசியமானது. மற்றும் அவ்வாறு செய்வதால் வாடிக்கைக்காரர்களிடம் மனக்கசப்போ, குறை கூறும் போக்கோ இல்லாமற் செய்யும்.

நேரடியாகத் தபால் மூலம் செய்யப்படும் விளம்பரத் துறைகளில் ஒன்று பட்டியலாகும். இதைப்போல, வாங்கக் கூடியவர்களுக்குக் கடிதங்கள், சுற்றறிக்கைகள், சிறு அறிக்கைகள், செய்தித்தாள்கள், வெளியீடுகள் சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் முதலியவற்றையும் அஞ்சல் மூலம் அனுப்பலாம். இவை யாவும் வாங்கக் கூடியவர்களைக் கடை நோக்கி வரவழைக்க உதவும். இத்தகைய அஞ்சல் விளம்பரங்கள் நன்கு பயன்பட வேண்டுமெனில் மனம் கவரக்கூடியனவாகவும், கவர்ச்சியாகவும், சுருக்கமாகவும் இருக்க வேண்டும். மேலும், கூர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கே அவை அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு புத்தகக் கடையும் தன் வெளியீடுகளுக்கேற்ற வகையில் யாருக்கு அஞ்சல் விளம்பரங்கள்

அனுப்ப வேண்டும் என்ற ஜாபிதாவை, 'டெலிபோன்' விவரப் புத்தகம், அல்லது பொது மக்கள் ஜாபிதாக்கள் முதலியவற்றி லிருந்து கவனத்துடன் தயாரிக்க வேண் டும்.

கீழ்க்கண்ட சில விளம்பர முறைகளும் அதிகப் பயன் தருவன. விற்கப்படும் ஒவ் வொரு புத்தகத்திலும் மற்ருெரு புத்தகத்தின் விளக்கச் சுருக்கமோ, அல்லது பட்டியலோ வைக்கப்படலாம். கடிதங்கள், அஞ்சல் கட் டுக்கள் முதலியவற்றுடனும் பட்டியல்கள் சேர்த்து அனுப்பப்படலாம். மற்றும் ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரின் புத்தகத்தை ஒருவர் விரும்பி வாங்கினுல் அவர் அதே எழுத்தாளரின் மற்ற நூல்களேயும் வாங்க விரும்பலாம். எனவே அந்த எழுத்தாளரின் புதிய புத்தகங்கள் வெளி வரும்போது அச் செய்தியை, வாங்கக் கூடியவருக்கு அனுப்பு வது நல்லது. மேலும், பள்ளிக்கூடங்கள், நூல் நிலேயங்கள் முதலிய இடங் களுக்கு அடிக்கடி சென்று தொடர்பு பூண்டு அவர்களின் தேவைகளே அறிந்து நிறை செய்வதும், அவர்கள் பார்வையிட்ட புத்தகங் களே எடுத்துக் கொண்டு மற்றவற்றைத் திருப்பி அனுப்புவதற்கு வசதி செய்து தரு வதும் விற்பனே முன்னேற்றத்துக்குரிய சிறந்த முறைகளாகும்.

**நேர்முக விற்பனே**

ஒவ்வொரு சில்லரைக் கடையின் விற்பனே முன்னேற்றம் அக்கடையின் விற்பனேயாள ரின் திறமையில் அடங்கியுள்ளது. ஒரு கடை யின் விற்பனேயாளர்களேக் கொண்டே வாடிக் கைக்காரர்கள் அக்கடைமீது நல்லெண் ணத்தைப் பெறுகின்றனர். எனவே, விற் பனேயாளர்களேப் பொது மக்களுடன் நல்ல தொடர்பு உண்டாக்கும் சிறந்த தூதர்களா கப் பயிற்றுவிப்பது மிக முக்கியமானதா கும். விற்பனே முன்னேற்றத்துக்குரிய பல வழிகளிலும், நேர்முக விற்பனே மிக மிக முக்கியமானது. ஏனெனில் மற்ற சாதனே களால் ஈர்க்கப்பட்ட மக்கள் கடைக்கு வந்த பின்னர் அவர்களே வாங்குமாறு வலியுறுத்து வது விற்பனேயாளரின் திறமையிலேயே அடங்கியுள்ளது. விற்பனேயாளர் உண்மை யான பணிபுரிய வேண்டுமெனில், "பெரிதும் தொண்டு செய்பவனே பெரிதும் இலாபம் அடைவான்" என்ற 'ரோட்டரிக் குழு'வின் குறிக்கோளுடன் வேலே செய்ய வேண்டும்.

விற்பனேயாளரின் குறிப்பிடத்தக்க தோற் றம் எவ்வளவு முக்கியமானது என்பதும் உணரத்தக்கது. குறிப்பிடத்தக்க தோற்றம் என்று சொல்லும் பொழுது புறத்தோற்றம், உடல் பலம் முதலியன மட்டும் அடங்கி யவை என்று கூற இயலாது. அவை முக்கிய மானவையே என்ருலும் வாடிக்கைக்காரர் கள் மனத்தில் நல்லெண்ணத்தையும் நம்பிக் கையையும் உண்டாக்க வேண்டியது மிக மிகத் தேவையாகும். இதற்கு விற்பனேயாளர் கள் புத்தகங்களேக் குறித்த நல்ல அறி வைப் பெற்றிருக்க வேண்டியது அவசியம். எனவே விற்பனேயாளரின் குறிப்பிடத்தக்க தோற்றம், பொது இலக்கிய அறிவு, கடை யில் உள்ள புத்தகங்களேக் குறித்துச் செய்தி களேத் தெரிந்திருத்தல், வாடிக்கைக்காரரை நன்கு அறிந்து அவருடன் தொடர்பு கொண்டு அவர் மனத்தில் நம்பிக்கை ஊட் டும் சக்தியைப் பெற்றிருத்தல் இவை அனேத் தும் புத்தக விற்பனேக்கு மிக மிக இன்றி யமையாதன ஆகும்.

**விற்பனே விழாக்கள்**

விற்பனே விழாக்கள் விற்பனே அளவைப் பெருவாரியாகப் பெருக்கும். இந்த விழாக் களின்போது புத்தகங்களின் விலேகள் குறைக்கப்பட வேண்டுமென்ற அவசிய மில்லே. சிறப்பான சந்தர்ப்பங்களில் கண் காட்சி முதலியன அமைத்து விற்பனேயை ஊக்குவிக்கும் முறையைக் குறித்து நாம் இங்குக் காணலாம். தேசிய விழாக்கள், குழந்தைகள் நாள் முதலிய சந்தர்ப்பங்களே நன்கு பயன்படுத்தி விற்பனே மந்தப்பட்டி ருக்கும் சமயங்களிலும் பெருக்க முடியும். நகரில் கொண்டாடப்படும் சிறந்த நிகழ்ச்சி களே ஒட்டி கண்காட்சிகள் அமைக்கப்பட லாம். உதாரணமாக நகரில் பொருளாதார மகாநாடு நடக்கிறதெனில், பொருளாதார சம்பந்தமான புத்தகக் கண்காட்சி ஒன்று

அமைக்கப்படலாம். அது பொது மக்களின் கவனத்தை ஈர்த்து விற்பனையைப் பெருக்கு வதற்கு மிகவும் துணை செய்யும். அது போலவே குழந்தைகள் புத்தக வாரம் கொண்டாடுவதாக இருப்பின் பள்ளி விடு முறைக்காலம் மிகவும் ஏற்றதாகும்.

மற்றும், கடை துவக்கிய நாள் முதலிய வற்றை ஒட்டி விற்பனை விழாக்கள் அமைக்க லாம். அதுபோலவே, தேங்கியுள்ள சரக்கு களை வெளியேற்றும் வாயிலாக அதிகத் தள்ளுபடி கொடுத்தும் அதிக விற்பனை இல் லாத புத்தகங்களை விற்பதற்கு வழி செய்ய லாம். விற்றவை போக எஞ்சியுள்ளவற்றைத் திரும்பப்பெறும் வசதிகள் குறைவாக உள்ள நம் நாட்டில் சரக்கைத் தீர்க்கும் விழாக்கள் மிகவும் தேவையாகும். எனினும், இந்தப் பல்வேறு விழாக்களை ஒரு கடைக்காரர் தனிப்பட நடத்துவதைவிட பல கடைக்கா ரர்கள் ஒன்று சேர்ந்து நடத்துவது அல்லது தேசிய அளவில் கூட்டு முயற்சியுடன் நடத் தினால் மேலும் பலன் தரலாம்.

இவ்விழாக்களுடன் மற்றும் சில புதிய முறைகளைக் கையாளலாம். புத்தகங்களை வெளியிடும் விழாக்களை நடத்தல், ஆசிரி யரே நேரில் கடைக்கு வந்து தன் புத்தகங் களில் கையெழுத்திடுதல் முதலியனவும் பயன்படும். பெரிய மனிதர்களும், புகழ் பெற்றவர்களும் கடைகளுக்கு வந்து புத்த கங்களில் தம் கையெழுத்திடுதலும் உதவும். இத்தகைய விழாக்களுக்குப் புத்தகங்களு டன் அதிகத் தொடர்புள்ள நூல் நிலையத் தார், எழுத்தாளர்கள், மாணவர்கள், ஆசிரி யர்கள் முதலியவர்கள் அழைக்கப்படலாம். இந்த முயற்சிகளில் ஒரு முக்கியமான அம்சம் கவனிக்கப்பட வேண்டும். அவை பொதுமக்களுக்குச் சுவை தருவனவாக இருக்க வேண்டும்; இல்லையெனில் எதிர் பார்ப்பதற்கு நேர்மாறான விளைவையே தரும்.

### முடிவுரை

பொதுவான பிரச்சினைகளைக் கண்ட பின் னர் இறுதியாகச் சில தனிப்பட்ட பிரச்சினை களைக் காண்போம். விற்பனை முன்னேற்றச் சாதனைகள் நிரம்ப உள்ளன. புத்தகப் பட்டியல்கள், முன்கூட்டிய தகவல்கள், புத்தகம்-அதன் ஆசிரியர் குறித்த செய்தி கள், விளம்பரத் தாள்கள், விளம்பரத் தோரணங்கள் முதலிய பல்வகைச் சாதனை கள் உள்ளன. அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். தொழில் நுணுக்கப் புத்தகங்கள், கலைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், மலிவுப் பதிப்புக்கள் முதலியவற்றின் விற்பனையை முன்னேற்றச் சிறிதளவு மாறுபட்ட முறை களைக் கையாள வேண்டும். இத்தகைய புத்தகங்களைப் பொறுத்தவரை, பதிப்பகத் தாரும் விற்பனையாளர்களும் வாங்கக்கூடிய வர்களின் வருகைக்காகக் காத்திருக்காமல் அவர்களை நாடிச் சென்று வலியுறுத்தி வாங்கச் செய்ய வேண்டுவது மிக அவசிய மாகும். மற்ற புத்தகங்களுக்கும் இது முக் கியமானதே எனினும், தொழிற் கலைப் புத்தகங்களுக்கு இது மிகத் தேவையாகும்.

விற்பனை முன்னேற்றம் செயல் துறையில் வெற்றிகரமாக இயங்க வேண்டுமெனில், நன்கு திட்டமிட்டு, அத்திட்டத்தைச் செவ்வையாக நிறைவேற்றி, அதன் பயனை அவ்வப்பொழுது ஆய்ந்து அறிய வேண்டி யது மிகத் தேவையாகும்.

---

மழையில் அரைகுறையாய் நனைந்துவிட்ட இரண்டு சிறுவர்கள் ஒரு வீட்டில் ஒதுங் கினார்கள். அது ஒரு நவநாகரிக ஓவியரின் 'ஸ்டுடியோ'. அங்கே சுவரில் அவர் வரைந்திருந்த புதிய ஓவியம் மாட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்தஉடன் அந்தச் சிறு வர்களில் பெரியவன் சின்னவனுக்கு அதைக் காட்டிவிட்டு, "டேய்! நாம இங்கே நின்னா இது நம்ம வேலைதான்னு நினைச்சி நம்ம முதுகைப் பழுக்க வச்சிடுவாங்க. வா, நாம போயிடலாம்" என்றான்.

உடனே இரண்டு பேரும் மழையில் நனைந்துகொண்டே ஓட்டம் பிடித்தார்கள்.

# தமிழ் நாட்டில் நூலகங்கள்

நெ. து. சுந்தரவடிவேலு

அதோ அழகிய அகல் விளக்கு: வழிபாட்டு அறையில் சுடர் விட்டு எரிகிறது.

இதோ வெளிச்சம் போடும் மின்விளக்கு: நடுக் கூடத்தில் எரிகிறது.

இரண்டும் தொடர்ந்து எரிய என்ன தேவை? முந்தியதற்கு எண்ணெய். குறையக் குறைய ஊற்றி நிரப்ப எண்ணெய். பிந்திய தற்குத் தடைபடாமல் வந்து சேரும் மின்சாரம்.

இதே விதி மக்களுக்கும்.

இதோ நான்காம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்ட பெரியவர் பெரியசாமி.

அதோ பட்டம் பெற்றபின் படிப்பை நிறுத்திவிட்ட இளைஞர் நீலமேகம்.

இருவருடைய அறிவும் மங்காது ஒளிவிட தேவை என்ன? தொடர்படிப்புத் தேவை. கல்விக்கூடத் தொடர்படிப்பல்ல. பள்ளியில் இல்லா விட்டால் திண்ணையில் படிக்க வேண்டும். எப்போது ஓய்வு கிடைக்கிறதோ அப்போதெல்லாம் படிக்க வேண்டும். இல்லையேல்? பெரியசாமியின் எழுத்தறிவு மறைந்து போகும்; நீலமேகத்தின் அறிவு பழம் கணக்காகி விடும்.

சரி, படிக்க நூல்கள் வேண்டுமே! அவை எளிதில் கிடைக்க வேண்டுமே! எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமே! விலைபோட்டு வாங்கிப் படிக்க ஏழைகளால் முடியுமா? உள்ள சில பணக்காரர்களும் எத்தனை நூல்களைத் தமக்கென்று வாங்கி வைத்துக் கொள்ள முடியும்?

ஆகவே, ஊருக்கெல்லாம் பயன்படும் பொது நூல் நிலையங்கள் தேவை. ஊருணி போல, பொதுக்கோயில் போல பொருள் இல்லாதவர்களுக்கும் பயன் படக்கூடிய பொது நூல் நிலையங்கள் தேவை. இங்கும் அங்கும் இரண்டொன்று இருந்தால் போதுமா? போதாது. பல ஊர்களிலும் தேவை. அப்போதுதான் எங்கும் உள்ளவர்களுக்கு நன்மை.

இதை உணர்ந்த அறிஞர்கள், பொது நூலக இயக்கத்தை வளர்க்கத் தூண்டினர். இப்புத்துலகப் போக்கு சென்னையிலும் முளைத்தது. சென்னை பொது நூல் நிலையச் சட்டம் என்று உருவெடுத்தது. இது 1948ம் ஆண்டில். இச்சட்டம் நடை முறைக்கு வந்தது 1950ல். இத்தகைய சட்டத்தை இயற்றிச் செயல்படுத்தும் முதல் இராச்சியம்—இந்தியாவில்—சென்னையே.

இதன் நோக்கம் என்ன? 'வெள்ளத்தின் பெருக்கைப்போல், கவிப்பெருக்கும் கலைப் பெருக்கும் மேவச்'செய்தல். அதற்காக ஏராளமான நூல் நிலையங்களைத் திறத்தல். நாட்டின் எல்லாப் பக்கங்களிலும் நூலகங்களை அமைப்பதே குறிக்கோள்.

இதற்கு நடை முறை என்ன?

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சட்ட பூர்வமான நூலகக்குழு ஒன்று ஏற்படுத்துவது முதல் வேலை. இக்குழு மூன்று ஆண்டிற்கு ஒரு முறை புத்துயிர் பெறும். இப்போது கன்னியாகுமரி நீங்கலாக. மற்ற எல்லா மாவட்டங்களிலும் நூலகக் குழுக்கள் இயங்குகின்றன.

இந்நூலகக் குழுக்கள் ஊர்தோறும் நூலகங்களை ஏற்படுத்துகின்றன. முதலில் மாவட்டத்திற்கு ஒரு மைய நூலகம் ஏற்பட்டது. பின்னர் கிளை நூலகங்கள் கிளைத்தன. ஐயாயிரம் மக்கள் உள்ள பேரூர் தோறும் ஒரு கிளை நூலகம் அமைக்க ஆசை. எடுத்த எடுப்பிலேயே எல்லா ஊர்களிலும் ஏற்

படுத்த முடியுமா? இதுவரை 500 கிளைகள் ஏற்பட்டுள்ளன. பாக்கி உள்ள 300 பேரூர்களிலும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிளை நூலகங்கள் வந்துவிடும். அதற்காக மூன்றாவது திட்டத்தில் தனியாகப் பணம் ஒதுக்கியுள்ளனர்.

பேரூர்கள் மட்டுமா நாட்டில் உள்ளன? சிற்றூர்களுக்கும் நூலக வாய்ப்பு எட்ட வேண்டாமா? இதற்கான ஏற்பாடு, வழங்கு நிலையங்கள்(Delivery Stations). கிளை நூலகங்களிலிருந்து, சைக்கிலில் நூல்களை அனுப்பி வைப்பார்கள். கிராமத்தில் ஒருவர்—பெரும்பாலும் ஆசிரியர்—வழங்கு நிலையத்தின் பொறுப்பாளி. அவர் நூல்களைப் பெற்று ஊராருக்கு வழங்குவார். அவர்கள் படித்து முடித்ததும் அவற்றைத் திருப்பி வாங்கிக் கொள்ளுவார். அடுத்த முறை நூல்களைக் கொண்டு வரும்போது, படித்து முடித்தவற்றைத் திருப்பிக் கொடுத்து விடுவார். இத்தகைய வழங்கு நிலையங்கள் 620.

எல்லா நூலகங்களிலும் சேர்ந்து எத்தனை நூல்கள் உள்ளன? பன்னிரண்டு இலட்சம் நூல்கள் உள்ளன சென்ற ஓராண்டில் 168 இலட்சம் மக்கள் இந்நூலகங்களைப் பயன் படுத்தியுள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் பத்திரிகை படிப்போரே. நூல்கள் படிப்போரின் எண்ணிக்கை வளர்ந்து வருகிறது. இது நல்ல அறிகுறி.

இந்நூலகங்களை நடத்த வருவாய் என்ன? நிலம் வீடு ஆகியவற்றின் மீது சொத்து வரி விதிக்கிறார்கள் அல்லவா? அவ்வரியோடு, நூலக செஸ்ஸூம் வசூல் செய்கிறார்கள். அவ் வசூலிற்குச் சரி பங்கு மானியத்தைச் சர்க்கார் கொடுக்கிறார்கள். மொத்த வருமானம் சென்ற ஆண்டில், கிட்டத்தட்ட 24 இலட்சம் ரூபாய்கள். இது போக மூன்றாவது திட்டத்தின் கீழ், ஆண்டு தோறும் சில இலட்சம் ரூபாய்கள் உதவுகிறார்கள்.

படிப்புத் தாகம் அதிகமாகி வருகிறது. அத்தாகம் நூல்கள் மேல் செல்கின்றது. எழுத்தறிவும் பரவுகிறது. எனவே நூலகங்கள் அதிகரிக்க வேண்டும். அதற்கு வருவாய் அதிகரிக்க வேண்டும். இதற்கு வழி வகைகள் எவை?


## எமது புது வெளியீடுகள்

"சோமலெ" — ரூ.
- தஞ்சை மாவட்டம் — 6·00
- கோயம்புத்தூர் மாவட்டம் — 4·00
- வட ஆர்க்காடு மாவட்டம் — 3·00
- கன்னியாகுமரி மாவட்டம் — 3·00

"சோமு"
- கடல் கண்ட கனவு — 7·00
- அக்கரைச் சீமையில் — 5·00

முடியரசன்
- முடியரசன் கவிதைகள் — 4·00
- காவியப் பாவை — 1·75

அழ. வள்ளியப்பா
- மலரும் உள்ளம் (இரண்டாம் தொகுதி) — 5·00

ஆர். வெற்றிச் செல்வி
- சித்திரத் தையல் — 3·00

பி. எஸ். மணி
- சிங்கச் சிலை — 1·00

கி. சந்திரசேகரன் — ரூ.
- ரவீந்திரநாத தாகூர் — 2·00

### மொழிபெயர்ப்பு நூல்கள்

#### ஆங்கில மூலம்

ரவீந்திரநாத தாகூர்
- அனைத்துலக மனிதனை நோக்கி — 10·00

ஷேக்ஸ்பியர்
- ஹாம்லெட் — 2·00
- மாக்பெத் — 2·75

#### மலையாள மூலம்

டாக்டர் எஸ். கே. நாயர்
- ஐயப்பன் — 4·00

தகழி சிவசங்கரன் பிள்ளை
- செம்மீன் — (அச்சில்)
- இரண்டு படி — (அச்சில்)

## பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை-1.

# கலைக் களஞ்சியம்

பெ. தூரன்

ஒரு புதிய பாதை. செப்பனிட்டுச் சீராக்கி அமைத்து வைத்த பாதையல்ல. காட்டிற் குள்ளே புகுந்து புதிதாக உருவாக்க வேண்டிய பாதை. பாதையே இல்லாத இடத்திலே கல்லையும் முள்ளையும், மேட்டையும் பள்ளத்தையும் பொருட்படுத்தாமல் வேலை செய்து காண வேண்டிய பாதை. இருட்டிலே புகுந்து வெளிச்சம் கொண்டு வர வேண்டிய பாதை. அப்படிப்பட்ட பாதையிலே முனைந்து பணி செய்ய வேண்டுமென்று எனக்கு அடங்காத ஆர்வம்; அதில் ஏற்படும் இன்னல்களை எதிர்த்துப் போராடுவதில் ஒரு தனி மகிழ்ச்சி.

தமிழிலே கலைக்களஞ்சியத்தை முதன் முதலாக உருவாக்குவது இப்படிப்பட்ட புதிய பாதையில் வேலை செய்வதுபோலத் தான். ஆனல் தரையின்மீது அமைக்கும் புதிய பாதையைவிட இது எவ்வளவு சிக்கலானது!

ஆங்கிலத்திலே இன்று ஒரு புதிய கலைக் களஞ்சியம் உண்டாக்குவது அவ்வளவு கடினமானதல்ல. அந்த மொழியிலேயே ஆயிரக்கணக்கான நூல்கள் விஞ்ஞானத்தைப் பற்றியும் கலைகளைப் பற்றியும் இருக்கின்றன. எல்லாத் துறைகளிலும் ஆராய்ச்சிகள் செய்து, திட்டவட்டமான முடிவுகள் கண்டு ஆங்கில மொழியிலேயே எழுதியிருக்கிருர்கள்; இன்னும் எழுதியவண்ணமிருக்கிருர்கள். விஞ்ஞானம் முதலிய எந்தப் பொருளைப் பற்றி எழுத வேண்டுமானலும் அதற்கு வேண்டிய கலைச் சொற்கள் தயாராக இருக்கின்றன. தாய்மொழியிலேயே எழுதக்கூடிய பழக்கமுள்ள அறிஞர்களும், விஞ்ஞானிகளும் இருக்கிருர்கள்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானல் தமிழிலே இவையெல்லாம் இனிமேல்தான் உண்டாக வேண்டும். உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் உபயோகத்திற்காக ஒரு சில கலைச் சொற்கள் உருவாகியுள்ளன. உயர்நிலைப்பள்ளிக்காகத் தமிழிலே விஞ்ஞான நூல்களும் இருக்கின்றன. அவற்றைத் தமிழிலே கற்பிக்கும் ஆற்றல் உள்ள ஆசிரியர்கள் இருக்கிருர்கள். ஆனல் கலைக் களஞ்சியத்திற்கு இவை போதுமா? கல்லூரிகளுக்கும் பயன்படக்கூடிய ஆயிரம் ஆயிரமான கலைச் சொற்கள் வேண்டும். அறிவுத் துறையிலுள்ள எல்லாக் கிளைகளைப்பற்றியும் கலைக்களஞ்சியத்தில் சுருக்கமாகவோ விரிவாகவோ எழுதி ஆக வேண்டும். விஞ்ஞானத்திலே மிகுந்த அறிவுபடைத்த அறிஞர்கள் நம் நாட்டிலே பலருண்டு; ஆனல் அந்த அறிவைப் பயன்படுத்தித் தமிழிலேயே கட்டுரைகளோ நூல்களோ எழுதக்கூடியவர்கள் மிகமிக அருமை. தமிழிலே இந்தப் புது விஞ்ஞானக் கருத்துக்களைக் கூறமுடியாது என்று கூறக்கூடியவர்கள் வேண்டுமானல் நிறைய இருக்கிருர்கள்.

இந்த நிலைமையை உள்ளத்தில் வைத்துக் கொண்டு இதைச் சமாளிக்க வேண்டிய முறையில் திட்டம் வகுக்க வேண்டும். இருக்கும் குறைகளை எடுத்து விளக்கிக்கொண்டிருப்பதில் பயனேற்படாது. ஆனல் குறைகளை உணராதிருப்பதும் தவறு. கண்ணை மூடிக்கொண்டு செயலில் இறங்குவது அறிவுடைமையல்ல. குறைகள் தெரியும், அவற்றை நீக்கவே செயல்புரிவோம் என்று மார்தட்டும் துணிச்சலோடு செயலில் ஈடுபட வேண்டும்.

தமிழ்க் கலைக்களஞ்சியத்திற்குத் திட்டம் வகுக்கப் பல அறிஞர்கள் அடங்கிய குழுவொன்று முதலில் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு அறிவுத் துறையிலும் என்

னென்ன பொருள்கள் கலைக்களஞ்சியத்தில் இடம்பெற வேண்டும் என்று துணியப் பல சிறு குழுக்களும் நியமிக்கப்பட்டன. கலைச் சொற்களை உருவாக்கும் குழுக்களும் அமைந்தன. ஆர்வத்தோடு அனைவரும் ஒத்துழைத்தனர்; பல நாட்கள் கூடி விவாதித்தனர். பொருட்பட்டி சித்தமாயிற்று. ஒவ்வொரு பொருளைப் பற்றியும் சிறப்பாக எழுதக்கூடிய அறிஞர்களின் பட்டியும் உருவாயிற்று. இந்தப் பட்டியிலே தமிழ் நாட்டு அறிஞர்கள் மட்டும் இருக்கவில்லை. இந்திய அறிஞர்களும், உலகத்திலுள்ள பல நாட்டு அறிஞர்களும் இதில் இடம் பெற்றனர். ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு பழங்குடி மக்களைப் பற்றி எழுத வேண்டுமா? அம்மக்களிடம் பழகி அவர்கள் வாழ்க்கையையும், பழக்க வழக்கங்களையும் ஆண்டுக் கணக்கில் ஆராய்ந்து அறிந்த ஒருவர் எந்த நாட்டிலிருந்தாலும் அவரையே அம்மக்களைப் பற்றி எழுதக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்பது பொதுவான தீர்மானம். அதன்படியே கூடுமான வரையிலும் எழுத்தாளர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அவர்களால் தமிழிலே எழுத முடியாதே என்று வினவலாம். தமிழ்நாட்டில் உள்ள அறிஞர்கள் பலராலும் தமிழில் எழுத முடியாது. அவர்கள் அனைவரும் ஆங்கிலத்திலேயே கட்டுரை எழுதி உதவினார்கள். அவற்றைத் தமிழில் அமைப்பது அலுவலகத்தின் பொறுப்பு.

இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட கலைச் சொற்களைத் திட்டம் செய்வது எளிதான செயலல்ல. முப்பது, நாற்பது குழுக்கள் ஒவ்வொரு மாலை வேளையிலும் வசதிக்கேற்றவாறு தனித் தனியாகக் கூடின. விஞ்ஞான வல்லுநர்களும், தமிழ்ப் புலவர்களும் ஒருங்கமர்ந்து துருவிப் பார்த்துச் சொற்களைத் தீர்மானித்தனர். சில வேளைகளில் ஒரு நாளுக்கு இருபது சொற்கள்தாம் தேறும். சில சொற்களைப் பின்னால் பார்ப்போம் என்று தள்ளிப் போடவும் நேரும். இவ்வாறு கலைச்சொற்பட்டி எல்லாத் துறைகளுக்கும் உருவாயின.

புதிய முயற்சியிலே உதவ வேண்டும் என்ற ஊக்கமும் உற்சாகமும் எல்லோரிடத்திலும் நிறைந்திருந்தன. இல்லாவிட்டால் இப்பணி முடிந்திருக்காது. பொருள் இதைச் சாதிக்கவில்லை; அன்பே இதைச் சாதித்தது.

கட்டுரைகளை எழுதி உதவிய அறிஞர்களும், அவற்றைப் பரிசீலனை செய்த அறிஞர்களும் தங்களுக்குள்ள பணிகளுக்கிடையிலே ஒழிவு தேடிப் பிடித்து அன்பாலேயே அவற்றைச் செய்தனர். கட்டுரைக்காக அளிக்கும் தொகை பெரிதல்ல; பலர் அதையும் பெற்றுக்கொள்ளவில்லை. பரிசீலனைக்கென்று எவ்வித ஊதியமும் கிடையாது. இப்படிப்பட்ட ஒத்துழைப்புக் கிடைத்ததை நான் ஒரு அரிய வாய்ப்பாகக் கருதுகிறேன்.

"என்னுடைய மாணவன் ஒரு பெரிய பணியிலே முனைந்திருக்கிறான்; என்னாலாவதை நான் செய்தாக வேண்டும்" என்று ஓய்வுபெற்ற பேராசிரியர் ஒருவர் கூறியதாக அன்பர் ஒருவர் சொல்லக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்தேன். தமிழுக்காகச் செய்யும் இப்புது முயற்சியில் அப்பேராசிரியரைப் போலவே பலர் ஆர்வங் காட்டினர். வெளியூர் அறிஞர்களும் எங்கள் வேண்டுகோளுக்கு அன்போடு இணங்கி உதவினர்.

ஏற்றுக்கொண்ட பணியை நிறைவேற்றாதவர்களே இல்லையா என்றால் இல்லையென்று கூற இயலாது. அப்படி எப்படி இருக்க முடியும்? பலருக்கு மிகப் பல அலுவல்களிருக்கும்; ஒழிவு கிடைத்திராது. இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுகூடக் கட்டுரை அனுப்பாதவர்கள் உண்டு. வேறு வகையிலே அல்லது வேறு அன்பர்களின் உதவியால் இப்படி ஏற்படும் ஏமாற்றத்தை நீக்கிக்கொள்ள வேண்டும். சலித்துக்கொள்வதிலேயோ சோர்வடைவதிலேயோ பயனில்லை.

கட்டுரையொன்று கிடைத்தால் அதை ஏற்றவாறு அமைத்து, அதற்கு வேண்டிய விளக்கப் படங்களையும் சித்தம் செய்து அச்சுக்குச் செல்லுமுன் கட்டுரையாளரின் இறுதி ஒப்புதலையும் பெற்று முடிப்பது முக்

கியமான வேலை. கூடுமான வரையில் உரை நடை ஒரேமாதிரியாக அமைய வேண்டும். கலைச் சொற்கள் எல்லா இடங்களிலும் மாறுபாடின்றி வழங்க வேண்டும். ஒரு பெயரை ஓரிடத்தில் ஒருவாறு உச்சரித்தால் அதே உச்சரிப்பு எல்லாத் தொகுதிகளிலும், எங்கும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஆர்ஜென்டீனு என்ற ஒரு நாடு தென் அமெரிக்காவிலிருப்பது அனைவருக்கும் தெரியும். அதைக் குறிக்கும்போது தமிழிலே ஆர்ஜென்டைனு, ஆர்ஜென்டினு, அர்ஜென்டைனு, அர்ஜென்டினு என்று பலவாறு எழுதுகிருர்கள். இவற்றில் சரியான ஒரு சொல்லை நிச்சயித்து அதையே எல்லா இடங்களிலும் வழங்க வேண்டும். இப்படியே ஆயிரக்கணக்கான பெயர்கள்–இடப் பெயர்கள், மக்களின் பெயர்கள், விலங்கு முதலிய உயிரினங்களின் பெயர்கள் எல்லாவற்றையும் வழங்க வேண்டும். பானமா என்பது தமிழிலே பனுமா ஆகிவிட்டது; காங்கரு என்ற ஆஸ்திரேலிய விலங்கு கங்காரு ஆகிவிட்டது. இவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும்.

ஒரு பொருளைப் பற்றிக் கலைக்களஞ்சியத்தில் எழுதும்போது அதைப் பற்றி என்னென்ன விஷயங்கள் கூற வேண்டுமோ அவையெல்லாவற்றையும் கூற வேண்டும்; அப்பொருளைப் பற்றி மாறுபட்ட கருத்துக்களிருந்தால் அவையனைத்தையும் எடுத்துச் சொல்ல வேண்டும். நேற்றுவரை அதைப் பற்றி எழுந்துள்ள கருத்துக்கள் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அக் கட்டுரை அல்லது குறிப்பு பெரிதும் பயன் படும். கலைக்களஞ்சியத்தைப் பார்த்த பிறகு அப்பொருளைப் பற்றிய வேறு கருத்துக்களுக்காக வேறெங்கும் தேட வேண்டாதபடி அக்குறிப்பு முழுமையாக, எல்லா விவரங்களும் அடங்கியதாக இருப்பது அவசியம். எழுதுவோரின் விருப்பு வெறுப்புக்கு அதில் இடமில்லை; சொந்தக் கருத்துமட்டும் இருந்தால் போதாது. மாறுபட்ட கருத்துக்களும் இடம்பெற வேண்டும். சொந்தக் கருத்தே ஏற்றுக்கொள்ளத் தக்கதென்று தோன்றினுல் அதற்குரிய காரணங்களைக் கூறலாம். ஆனுல் அக்கருத்தை மட்டும் எழுதிவிட்டு நிறுத்திக்கொள்ளலாகாது. மேலே குறித்த வற்றையெல்லாம் தன்னகத்தே கொண்டிருப்பதோடு கட்டுரைகள் கூடுமானவரையில் மிகைபடக் கூருமல் சுருக்கமாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் கலைக்களஞ்சியம் பெரிதும் பயன்படும்.

எல்லாக் கட்டுரைகளையும், குறிப்புக்களையும் அவ்வாறு செப்பனிட முடிகிறதா? அதுவும் முதல் முயற்சியிலேயே இதில் முழு வெற்றி கிடைக்குமா? மேல்நாட்டுக் கலைக் களஞ்சியங்கள் பல எத்தனையோ புதிய பதிப்புக்களிலே திருத்தம் பெற்று வெளியாகியுள்ளன. அவற்றிலேகூட இந்த நிறைவை எல்லா இடங்களிலும் காண முடியவில்லை.

ஆனுல் காண வேண்டும்; அதுவே குறிக்கோளாக எப்பொழுதும் முன்னுல் நிற்க வேண்டும். அக்குறிக்கோள் எங்கள் முன்னுல் நிச்சயமாக நின்றது. ஆனுல் குறிக்கோளுக்கும், செயல் முறைக்கும் இடையே எத்தனை பள்ளங்கள்; இன்று பள்ளமாக உள்ளது நாளை நிச்சயமாக மேடு செய்யப் பெறும். இந்த நம்பிக்கையிலே முதல் முயற்சி நடைபெற்றுள்ளது.

ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞானக் கட்டுரைகளைத் தமிழாக்கம் செய்வது ஓர் அரிய அனுபவம். அதில் எத்தனையோ இடர்ப்பாடுகள். நடை தமிழாகப் பல இடங்களில் அமையாது. நடை அமைந்துவிட்டாலும் பொருள் தெளிவாக விளங்காது. விஞ்ஞானத்தைப் பற்றி எழுதி எழுதி அதற்கெனத் திருத்தமான நடை உருவாக வேண்டும்.

ஓவியம், சிற்பம் முதலியவற்றிற்கும், விலங்கு, பறவை, இயற்கைக் காட்சி முதலியவற்றிற்கும் வண்ணப் படங்களும் நிழற் படங்களும் ஆயிரக்கணக்கில் வேண்டும். சிறந்த படங்களாகவும் தேர்ந்தெடுக்க வேண்டும். விளக்கப் படங்களைமட்டும் அலுவலகத்திலேயே சித்தஞ் செய்துகொள்ளலாகும். ஆனுல் நிழற்படங்களுக்கு உலகெங்கும் பல நிறுவனங்களுக்கு எழுதிப் பெற

வேண்டும். அவ்வாறு பெற்ற படங்கள் அச்சிலே நன்கு வருமாறு அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்ய வேண்டும்.

படங்களையும், கட்டுரைகளையும், அகர வரிசைப்படி அமைத்து வேண்டியபொழுது உடனே எடுக்குமாறு ஒழுங்கு செய்து வைப்பது அலுவலகத்தில் ஒரு பெரிய வேலை. இவ்வாறு சிக்கலான வேலைகள் பல உண்டு. அவற்றை இங்கு விவரிக்க இயலாது; தேவையும் இல்லை.

எடுத்த முயற்சியிலே கூடுமான அளவு நிறைவு காணப் பாடுபட்டோம்; அம்முயற்சிகள் இறுதிக் கட்டம் எய்திவிட்டன. இன்னும் ஒரு தொகுதியோடு தமிழ்க் கலைக்களஞ்சியம் பூர்த்தியடையும்.

எதிர்பார்த்த அளவுக்குமேலே அறிஞர்களின் ஒத்துழைப்புக் கிடைத்தது. வேலைக்கு ஊக்கவும், வேகங் கொடுக்கவும், ஆக்கந் தரவும் கழகத்தின் தலைவர் ஆர்வத்தோடிருக்கிறார். அவருடைய ஆர்வத்தைச் சொல்லிக் காட்ட முடியாது. நேரில் கண்டவர்களே சரியாக உணர்ந்துகொள்ள முடியும். தமிழ் மக்களின் பேராதரவும் பரிவும் கிடைத்துள்ளன. அலுவலகத்திலே இடைவிடாது உழைக்க சகோதர ஊழியர்கள் உற்சாகங் குன்றாதிருக்கின்றனர். ஊக்கமும் உழைப்பும் உள்ள இடத்தில் இறைவனது கருணை நிச்சயமாகத் தோன்றும். வேறென்ன வேண்டும்? 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி' என்று தோள்கொட்டி ஆர்ப்பரித்துப் பாரதியாரோடு பாடவேண்டியதுதானே !

---


FOR YOUR REQUIREMENTS

IN

PAPER AND BOARDS

*Please Contact*

RAJA PAPER MART

3, MALAIPERUMAL STREET

MADRAS-1

PHONE: 21526



**Books released in the last quarter**

| | | Price Rs. |
|---|---|---|
| **Novel** | | |
| Viddikale Kollunna Sangham | Sylem, Alwaye | 2.50 |
| Moonu College Kumarikalute Katha | Annie Joseph | 1.00 |
| Orutharathinte Athma Katha | Prasannan G. | 1.40 |
| Theekkattum Manjukattiyum | Patiyath | 1.25 |
| Rantu Nerchakkar | Tolstoy | 0.80 |
| Kanathaya Rahasya rekha | B. G. Kurup | 2.75 |
| Sheelan | Tolstoy | 0.80 |
| Purohithan | Maupassant | 1.00 |
| **Short Stories** | | |
| Ozhinja Kasera | N. Govindan Kutty | 1.40 |
| Orotta Kozhimutta | Tolstoy | 1.25 |
| Manavattippennu | Kanam | 1.75 |
| Avanum Orachanuntayi | Maupassant | 1.40 |
| **Dramas** | | |
| Kannillenkilum Kanam | Ponkunnam Damodaran | 1.50 |
| Nee Ninte Ayalkarane Snehikka | Kanam | 2.00 |
| **Humour** | | |
| Irupathettu Kettu | Veloor Krishnamurthy | 2.00 |
| **Poem** | | |
| Panakkizhi | P. Pushpangadan | 1.00 |

**SREE NARASIMHA VILASAM BOOK DEPOT,**
THURAVOOR,
**KERALA.**

# தமிழ்ப் புத்தக விற்பனை

கு. அ. செல்லப்பன்

1950-ம் ஆண்டிற்குப் பிறகு புத்தக விற்பனை சிறிதுசிறிதாகப் பெருகிவருகிறது. பொதுநூல்களில் பதிப்பொன்றுக்கு 5000பிரதிகள் வெளியிடக் கூடிய நிலையும், திருக்குறள், இராமாயணம், பாரதம், பாரதியார் கவிதைகள் போன்ற மலிவுப் பதிப்பு நூல்கள் இலட்சம், இரண்டு லட்சம் பிரதிகள் விற்பனையாகும் நிலையும் தோன்றியுள்ளன. இந்நிலை குறிப்பிட்ட ஒரு சில ஆசிரியர்களின் நூல்களுக்கும் நன்கு விளம்பரம் செய்யப்பட்ட மலிவுப் பதிப்பு நூல்களுக்கு மட்டுமே பொருந்தும். மற்றபடி பதிப்பு ஒன்றுக்கு 1000, 2000 பிரதிகள் வெளியிடுவதும் அவற்றைக் குறைந்தது மூன்றுண்டுகள் வரை வைத்திருந்து விற்பதுமே பெரு வழக்கமாக உள்ளது.

புத்தகம் வாங்குவோரில் குறிப்பிடத் தக்கவர்கள் :—

1. உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் உள்ள புத்தக வியாபாரிகள்.
2. மாவட்ட நூலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பஞ்சாயத்துக்களில் உள்ள நூலகங்கள், மற்றும் பல வகையான நூல் நிலையங்கள்.
3. சொந்தத் தேவைக்கு வாங்குவோர்.
4. மணப் பரிசளிக்க வாங்குவோர்.

புத்தகத் துறையில் விற்பனைப் பகுதி நன்கு வளர்ச்சியடைய வில்லை. எல்லாப் புத்தகங்களையும் சேகரித்து தேவையுள்ளவர்களுக்கு அவர்கள் தேவையறிந்து விற்பனை செய்யும் நிலையங்கள் இல்லை என்றே சொல்லலாம். தனிப்பட புத்தக வெளியீடு மட்டும் செய்வோர், விற்பனை மட்டும் செய்வோர் என்ற பாகுபாடும் அதிகமாக இல்லை. பெரும்பாலான புத்தக வியாபாரிகள் தமிழ்ப் புத்தகங்களோடு, ஆங்கிலப் புத்தகங்கள், பத்திரிகைகள், 'ஸ்டேஷனரி'ச் சாமான்கள் முதலியவற்றில் ஒன்றையோ பலவற்றையோ சேர்த்து விற்பனை செய்கின்றனர். பள்ளிக்கூடப் புத்தக விற்பனைக் காலங்களில் தங்களின் மற்ற வணிகப் பொருள்களுடன் புத்தக விற்பனை செய்பவர்களும் உண்டு.

சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், நாகர்கோயில் போன்ற நகரங்களில் நன்கு வளர்ச்சியடைந்த பெரிய புத்தக விற்பனை நிலையங்கள் உள்ளன. கடல் கடந்த நாடுகளில் இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணத்திலும், மலேயாவில் சிங்கப்பூர், கோலாலம்பூர், பிணுங்கு முதலிய ஊர்களிலும், பர்மாவில் இரங்கூனிலும் நல்ல புத்தக வியாபாரிகள் உள்ளனர். இவை தவிர அந்தமான், இந்தோனேசியா, பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஓரோர் சமயங்களில் புத்தகங்கள் அனுப்ப நேரிட்டாலும் அவை வணிக முறையில் குறிப்பிடத் தக்கவை அல்ல.

ஹிக்கின்பாதம்ஸ், சுதேசமித்திரன் ஸ்தாபனத்தார் பல ஊர் ரயில்வே நிலையங்களில் புத்தக விற்பனை செய்கின்றனர். குறிப்பிட்ட ஓர் ஊரில் தங்கள் புத்தகங்களுக்கு விற்பனை உரிமை கொடுக்கும் 'ஏஜென்சி' முறையை ஒரு சில வெளியீட்டார்கள் இப்பொழுது ஆரம்பித்துள்ளனர். இரண்டு மூன்று மாவட்டங்களுக்குச் சேர்த்து விநியோக உரிமை வழங்கும் முறையும் தென் மொழிப் புத்தக டிரஸ்டாரால் துவக்கப் பெற்றிருக்கிறது.

சுமார் 18,000 ஊர்கள் உள்ள தமிழகத்தில் 200க்கும் குறைவான வியாபாரிகளே உள்ளனர். இவர்கள் மூலமாகத்தான் பெரும்பாலான புத்தக வியாபாரம் நடை பெறுகிறது.

நூலக விற்பனைதான் புத்தக விற்பனையின் உயிர் நாடி. தமிழில் புத்தக விற்பனை அதிகரித்திருப்பதற்குக் காரணமும் நூலகங்கள் தாம். மாவட்ட நூலகத்தினர் அதிக எண்ணிக்கையுள்ள புத்தகங்களை வெளியீட்டார்களிடமிருந்து நேராகவே வாங்கிக் கொள்கின்றனர்.

புத்தகம் வாங்கும் தனிப்பட்டவர்களில் பெண்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சினிமா பார்த்தல், பத்திரிகை படித்தல் முதலிய துறைகளில் பெண்கள் விருப்பம் முக்கியமாக இருப்பது போல, புத்தக விற்பனையிலும் பெண்கள் விரும்பும் புத்தகங்கள் நன்கு விற்பனையாகின்றன. பத்திரிகைகளில் தொடராக வந்த நாவல்கள், சமையற்கலை, தையற்கலை போன்ற தங்களின் அன்றாடத் தேவைக்குப் பயன் படும் நூல்களில் இவர்களுக்கு அதிக விருப்பம் இருக்கிறது.

சிறுவர்கள் புத்தகம் படிப்பதில் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர். வாங்கும் சக்தி இவர்களிடமிருந்தால் புத்தக விற்பனை பல மடங்காகப் பெருகும். தமிழகத்தில் சிறுவர் புத்தகங்களுக்கு நல்ல எதிர்காலமிருக்கிறது.

ஆங்கிலம் படித்த தமிழர்களில் பலர் தமிழ்ப் புத்தகங்களை விரும்பிப் படிப்பதில்லை. வாங்கும் சக்தி மிகுந்துள்ள இவர்களின் பலம் தமிழுக்குப் பயன்படாது போவதுடன், "தமிழில் என்ன இருக்கிறது?" என்று இவர்கள் செய்யும் பிரசாரத்தால் தமிழ்ப் புத்தக விற்பனையும் குறைகிறது.

பொதுப் புத்தகங்கள், பள்ளிக்கூட புத்தகங்கள் என்ற பிரிவு இருப்பதுபோல் "குஜிலிக் கடைப் பதிப்புக்கள்" என்றும் ஒரு வகைப் பிரிவு தமிழ்ப் புத்தகங்களில் உண்டு. ஜோதிடம், வைத்தியம், அம்மானை போன்ற புத்தகங்கள் இந்த வகையைச் சேர்ந்தவை. தற்காலத்தில் சினிமாப் பாட்டு-வசனப் புத்தகங்களும் இந்த வகையில் சேர்ந்துள்ளன. இந்தப் புத்தகங்கள் படிப்பதில் குறிப்பிடத்தக்கவர்கள் கிராமத்துப் பெண்களும், மலேயாவிலும் இலங்கையிலும் உள்ள தோட்டத் தொழிலாளர்களும் ஆவர். இப்புத்தகங்கள் விற்பனையாகும் இடங்களில் குறிப்பிடத்தக்கவை சென்னையில் கந்தசாமிக் கோயில் தெருவும், மதுரையில் புதுமண்டபமும் ஆகும்.

விற்பனைப் பகுதியைப் போலவே விளம்பரப் பகுதியும் மிகப் பிற்போக்கான நிலையிலே இருக்கிறது. வெளிவரும் புதுப் புத்தகங்களை விற்பனையாளருக்குத் தெரிவிக்கும் முறைகூட நன்கு பரவவில்லை.

பொதுவாக வியாபாரிகளுக்கு 15%லிருந்து $33\frac{1}{3}$% வரை விற்பனைக் கழிவு தரப்பெறுகிறது. 20%, 25% கழிவு தருவதுதான் பெரு வழக்கமாக இருக்கிறது.

ஏப்பிரல், மே மாதங்கள் புத்தக விற்பனைக்கு மந்தமான காலம். பிப்ரவரி, மார்ச் மாதங்களில் சுறு சுறுப்பாக விற்பனை நடைபெறும்.

புத்தக ஏற்றுமதி வாணிபத்தில் இப்போது சில தொல்லைகள் தோன்றியுள்ளன. அந்நிய நாட்டு வங்கிகளில் கட்டிய பணம் கைக்கு வருவதற்குப் பல காரணங்களால் அதிக கால தாமதமாவதாலும்,நமது நாட்டிலிருந்து ரிசர்வ் பாங்கின் கண்டிப்பு அதிகரித்துள்ளதாலும் புத்தக ஏற்றுமதி செய்வோர் தயங்கித் தயங்கித்தான் ஏற்றுமதி செய்கின்றனர். ஏற்றுமதி வணிகத்தில் இலங்கை முதலிடமும், மலேயா இரண்டாமிடமும், பர்மா மூன்றுமிடமும் பெறுகின்றன.

தமிழகத்தில் ஆயிரக்கணக்கான பத்திரிகை விற்பனையாளர்கள் உள்ளனர். இவர்கள் தரமான புத்தகங்கள் தங்கள் கடைகளில் விற்பனை ஆகாது என்று நினைக்கின்றனர். புத்தக வெளியீட்டார்களில் சிலர் நியூஸ் பேப்பர் கடைகள் மூலம் தங்கள் புத்தகங்களை விற்பனை செய்வது தரக்குறைவு என்று கருதுகின்றனர். இந்த நிலை மாறி பத்திரிகைக் கடைக்காரர்களைப் புத்தக விற்பனையில் ஈடுபடுத்தினுல் நல்ல பயன் இருக்கும்.

அநேகமாக எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் பாடப் புத்தகங்கள் மட்டுமே விற்

பணி செய்யும் கோவாபரேடிவ் ஸ்டோர்கள் உள்ளன. இவர்களையும் பொதுப் புத்தக விற்பனையில் ஈடுபடுத்திப் பார்க்கலாம்.

அதிகக் கழிவும்,கடன் வசதியும்,விற்பனை ஆகாத புத்தகங்களைத் திரும்ப எடுத்துக் கொள்ளும் சலுகையும் தரப்பட்டால் புத்தக விற்பனை பல மடங்காகப் பெருகும் என்று புத்தக விற்பனையாளர்கள் நம்புகின்றனர். இப்பொழுது புத்தகங்கள் வெளிவரும் வேகத்தைப் பார்த்தால் நம்பிக்கையும் நாணயமும் உள்ள வியாபாரிகளுக்கு இந்த வசதிகள் எளிதில் கிடைக்குமென்று தோன்றுகிறது.

மூன்று கோடி மக்களையும், 2000க்கு மேற்பட்ட நூல்நிலையங்களையும்,கடல் கடந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வசதியையும் பெற்றுள்ள தமிழகத்தில் புத்தக விற்பனைக்கு நல்ல எதிர்காலமிருக்கிறது.

---

‘நான் ஏன் உயிரோடிருக்கிறேன்?’ என்ற தலைப்பில் 50 பக்கத்தில் கிறுக்கி எழுதப்பட்ட சிறுகதை ஒன்று பத்திரிகாசிரியரிடம் வந்தது.

பார்த்த உடனே கீழ்க்கண்ட குறிப்புடன் அது திருப்பி அனுப்பப்பட்டது. ‘இதை நீங்கள் தபாலில் அனுப்பியதால்தான்!’

* * *

ஒரு சினிமா நட்சத்திரம் மற்றொரு சினிமா நட்சத்திரத்திடம், “நேற்று பத்திரிகையில் உன் சுயசரிதையைப் படித்தேன். மிகவும் நன்றாக இருந்தது. யார் அதை எழுதியது?” என்று கேட்டாள்.

“அதிருக்கட்டும், உனக்கு யார் அதைப் படித்து விளக்கியது?” என்று இரண்டாவது நட்சத்திரம் திருப்பிக் கேட்டாள்.

*With the best compliments of*

## P. MOONIRATHINAM NAIDU & SONS

10, STRINGER STREET, MADRAS-1

*Head Office:*

**VELLORE**

*Dealers in:*

**PAPER & BOARDS**

புகழ் பெற்ற எழுத்தாளர்—அறிமுகம் :

# ஜி. சங்கர குருப்

'ஜி' என்ற அபிமானப் பெயரைப் பெற்றுள்ள, ஜி. சங்கர குருப் கேரளாவின் இன்றைய கவிஞர்களில் தலைசிறந்தவராவர். அவர் குரல் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் எட்டியுள்ளது. மேலும், இந்தியாவின் இணையற்ற எழுத்தாளர்களில் அவரும் ஒருவராகத் திகழ்கிறார்.

தத்துவ ஞானியான சங்கராச்சாரியாரின் பிறப்பிடமான காலடியின் அருகில் உள்ள ஒரு கிராமமே சங்கர குருப்பின் பிறப்பிடமாகும். தன் இளமையில், எழில் நிறைந்த அந்தக் கிராமத்தின் இயற்கைக் காட்சிகளில் தம்மை மறந்த குருப் படைப்பின் இரகசியத்தை உணரலானார். இயற்கையின் எழில் மிக்க காட்சிகள், ஒலிகள், நறுமணங்கள் முதலியவற்றைத் தீவிரமான ஆர்வத்தோடு தம் ஆரம்பக் கவிதைகளில் அவர் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அந்த இளங் கவிஞருக்கு இயற்கையே வாழ்க்கையாகத் தோன்றியது. மற்றக் கவிஞர்களைப் போலவே அவரும் இயற்கையைப் பெரிதும் விரும்பிக் கவிதைகள் இயற்றியபொழுது மனிதனின் ஆத்மப் பிரச்சினைகளைத் தொடர்புபடுத்தியே பாடியுள்ளார். அந்தித் தாரகையும், உதய நட்சத்திரமும், செக்கர் வானமும், வைகறைப் பொழுதும், மேகங்களும், கடலும்—இவை யாவும் அவருடைய கவிதைகளில் ஆழ்ந்த குறிப்புப் பொருள்களைப் பெற்றுவிடுகின்றன. மனிதனின் ஆத்மாவோடு தொடர்புபெற்ற குறியீடுகளாக அவை பயன்படுத்தப்படுகின்றன.

இந்த இளங்கவி, தாகூரால் மிகவும் ஆழ்ந்த முறையிலும், நிரந்தரமாகவும் வசீகரிக்கப்பட்டார். "மேன்மை பொருந்திய குருதேவருக்குரிய மிக்க மதிப்போடும், நன்றி உணர்வோடும் நான் அவரை நினைவு கூறு



கிறேன். அவர் கவிதைகளில் (ஆங்கில மொழி பெயர்ப்பில்) நான் பெற்ற முழுமையான பண்பாட்டின் நறுமணம் என் கவிதைகளின் இளமைப்பொழுதில் இரண்டறக் கலந்து தூய்மைப்படுத்தியது. சாலையோர மரங்களின் நிழலில் அகப்பட்டு மலர வேண்டும் என்ற துடிப்புடன் இருந்த என் கவிதைக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தவர் இந்தக் கவிஞரே ஆவார்." தாகூரை அவருடைய தாய்மொழியில் படித்து இன்புறக் கருதிய குருப் தம் 55 ஆம் வயதில் வங்க மொழியைக் கற்றார். 1959-ல் அவர் வெளியிட்ட 'கீதாஞ்சலி'யின் மொழிபெயர்ப்பு தலைசிறந்ததெனப் போற்றப்படுகிறது. தாகூர் குருப்பைப் பெரிதும் கவர்ந்துள்ளார் என்பதில் ஐயமே இல்லை.

இவ்வாறு சிலவகைகளில் அவர் தூண்டப்பட்டிருப்பினும், குருப்பின் சாதனைகள் யாவும் அவருடைய சொந்த முயற்சியால் கிடைத்தனவேயாகும். அவர் பல்கலைக்

கழகப் படிப்பு முதலியவற்றைப் பெற்றவரல்லர். அவர் பெற்ற கீழை மொழிகளில் வித்துவான் பயிற்சி தற்கால அறிவுத்துறையுடன் இயைந்து செல்லப் போதுமானது அன்று. இருப்பினும், அவர் தம் சொந்த முயற்சியால் ஆங்கிலத்தையும் சில இந்திய மொழிகளையும் பயின்று அறிவுத்துறையில் தம்மை வளர்த்துக்கொண்டார்.

ஜி. அவர்கள் ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் துவக்கி, எர்ணாகுளத்தில் உள்ள மஹாராஜாக் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி ஒய்வு பெற்ருர். சில காலம் அவர் கேரளா வானொலி நிலையத்தில் தயாரிப்பாளராகப் பணியாற்றினர். தற்பொழுதும் அவர் அகில இந்திய வானொலியின் இலக்கிய ஆலோசகராக உள்ளார். பல ஆண்டுகளாக அவர் அனைத்துக் கேரள இலக்கியக் குழுவின் (சமஸ்த கேரள சாஹித்ய பரிஷத்) தலைவராகப் பணியாற்றினர்.

தாகூரைப் பின்பற்றி ஜி. அவர்கள் குறியீடுகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். மலையாளத்தில் முதன்முதலில் குறியீட்டு முறையை (Symbolism) அறிமுகப்படுத்தியவர் அவரே. மற்றும் அவர் அத்துறையில் தனித் தன்மையை வளர்த்துவிட்டார். தம்முடைய சிந்தனையை மிகவும் அழகான முறையில் வெளிப்படுத்த பெருவாரியான குறியீடுகளைப் பயன்படுத்தியுள்ளார்.

அரசியல் வெறி, இன வெறி, ஆப்பிரிக்காவின் விடுதலை, லுமும்பாவின் இறப்பு முதலியவற்றைக் குறித்து அவர் கவிதை இயற்றும்பொழுது அகில உலக நோக்கத்தைப் பெற்றுவிடுகிருர். இக்கவிதைகள் யாவற்றிலும் அவர் அநீதியை எதிர்த்துப் போராடுகிருர்.

இக்கொடுமைகளை உலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதிலும் அவற்றைக் கடுமையாக எதிர்ப்பதிலும் மட்டும் அவர் திருப்தி அடையவில்லை. அவருடைய மனிதாபிமானம் கொழுந்துவிட்டு எரிகிறது; அந்நிலையில் அவர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக மிகுந்த ஆவேசத்தோடு போராடத் தொடங்கிவிடுகிருர். அமைதியான கலப்பை தரும் செய்தி இதுதான்: 'நான் எப்பொழுதும் ஒரு பொது உடைமை வாதி. என் கூர்மையான நாவினல் நான் உலகத்தையே உலுக்கிச் சமப்படுத்திவிடுவேன். அவ்வாறு உலகத்தை உலுக்கி மேலும் அழகுபடுத்துவேன்' என்று அவர் கூறுக்கள் (நாய்க்குடைகள் — 1945-ல் எழுதப்பட்டது) என்ற கவிதையில் பொருள் நயம் ததும்பப் பாடியுள்ளார்.

அவருடைய பொது உடைமை வாதம் ஒரு வகையில் மனிதாபிமானத்தின் திரிபே ஆகும். சில சமயங்களில் அவருடைய உணர்ச்சிகள் ஆவேசத்துடன் வெளிப்படும்; சில சமயங்களில் பிரச்சினைகளை விட்டுத் தொடர்பில்லாதவற்றைக் கூறுவது போலவும் தோன்றும்; மேலும் சில சமயங்களில் தூய காதலின் உயர்ந்த எல்லையிலும் வெளிப்படும். மனிதாபிமானம், தேசியம், பொது உடைமை முதலியவற்றைக் கடந்து இப்பொழுது அவர் அறிவியலின் வாயிலாக ஆத்மீகத்தை நோக்கிச் செல்லத் தொடங்கியுள்ளார். புதுப்புது உலகங்களை ஆய்வதில் கவிஞர்களுக்குத் தீராத மோகம் உள்ளது. அவருடைய பிற்காலக் கவிதைகளில் (1960) ஒன்ருன 'அம்மாமன் ஆசீர்வதிக்குந்நு' (மாமன் ஆசீர்வதிக்கிருன்) என்பதில் உள்ள இரு பாத்திரங்களான உலகமும் சந்திரனும் விஞ்ஞான விளைவுகளைக் குறித்து, விஞ்ஞான மொழியில் பேசுவது சுவைக்கத்தக்கது.

அறிவியல் துறையில் மனிதனின் வெற்றிகள் அவரைப் பெரிதும் கவர்ந்துள்ளன. "கதிரவன் எரிந்து தீர்ந்துவிட்டாலும், மனிதன் தன் ஆக்க சக்தியால் அதன் தணலி லிருந்து புதியதொரு கதிரவனை உருவாக்குவதுடன், உயிர்ப் பொருள்களையும் பழைய அழகுடன் உண்டாக்கி விடுவான்" என்று அவர் கூறியுள்ளார். விஞ்ஞானத்தின் பொருளியல் துறையுடன் ஒன்றிப் போகும் அவர், விஞ்ஞானம் மனிதனைக் கொண்டு செல்லவேண்டிய எல்லையற்ற வெளியில் எட்டிப் பார்க்கிருர். அந்தப் பரந்த வெளியில் முடிவில்லாத பேராற்றலின் 'மகிமையை'யே காண்கிருர் — அதையே அவர் முடிவான உண்மை என்று நம்புகிருர்.

# விசுவநாத சத்யநாராயணு

திரு. விசுவநாத சத்யநாராயணுவின் பல திறப்பட்ட சிறப்புத் திறமையில் மிக்க ஈடு பாடு கொண்ட ஆந்திர மக்கள் அவருக்குக் ''கவி சம்ராட்'' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிவிட்டனர். தம் திறமையில் நம் பிக்கையுள்ள அவர், நல்ல நெடிய தோற் றத்தாலும் கூர்ந்த பார்வையாலும் ஆந்திர மக்களின் உயர்ந்த மதிப்பைப் பெற்று விட்டார்.

அவர் 1895 ஆம் ஆண்டு கிருஷ்ணு ஜில் லாவில் உள்ள நந்தமூரு என்னும் ஊரில், வைதீக அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பயின்று தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் எம். ஏ. பட்டம் பெற்றுர். அவர் இளம் பருவத்தி லேயே எழுத்துலகத்தில் பெயர் பெற்றுவிட் டார். ஆந்திர நாட்டையும், ஆந்திராவின் பண்டைய வீரர்களையும் குறித்து அவர் இயற்றிய கவிதைகளின் தொகுப்பு நூல் களான 'ஆந்திர ப்ரசஸ்தி', (ஆந்திரா வின் புகழ்), 'ஆந்திர பௌரஷமு' (ஆந் திராவின் வீரம்) என்ற இரண்டும் அவருக்கு அளவற்ற புகழைப் பெற்றுக் கொடுத்தன. இத்தகைய நல்ல பெயருடன் எழுத்துலகத் தில் அடி வைத்த அவர், கவிதைத் துறையில் மட்டுமல்லாது, புதினம், சிறுகதை, நாடகம், கட்டுரை முதலிய பல துறைகளிலும் சிறந்த இலக்கியங்களைப் படைத்துவிட்டார். அவரு டைய மிகச் சிறந்த படைப்பு 'ராமாயண கல்ப வ்ருக்ஷமு' (ராமாயண கற்பக மரம்) என்ற இராமாயண காவியமே ஆகும். இதன் கடைசிப் பகுதியான யுத்த காண்டம் இன்னும் வெளிவர இருக்கின்றது. இக்காவி யத்தின் பெருமையை உணர்ந்தவர்கள் பழம் பெருமை வாய்ந்த நன்னையா, திக் கன்ன போன்றவர்க்குச் சமமாக இவரைக் கருதுகின்றனர்.

அவருடைய கவிதையில் பழங் காலத்திய உயர்ந்த இலக்கிய நடையும், தற்காலத்திய



பேச்சுத் தெலுங்கின் மொழி மரபும், ஆங் கிலக் கவிதைகளின் உணர்ச்சித் திறனும் இயைந்து அழகுடன் மிளிர்வதைக் காண லாம். 'கின்னர சானி பாடலு' (கின்னர மாதின் பாடல்கள்) என்பது எளிய மொழி யில் சந்த அழகுடன் கூடிய பெரிய இசைப் பாடல் ஆகும். இப்பாடல் ப்ாமர மக்களிடை யேயும் எளிதாகப் பரவியதில் வியப்பில்லை. 'சிருங்கார வீதி' (சிருங்காரப் பாடல்கள்) கண்ணன் கோபிகளின் லீலைகளை மையமாக வைத்துப் பாடப்பட்ட பக்திப் பாடல்களா கும். 'சசிதூதம்' (சந்திரன் தூது) என்ற தூதுக் காவியமும், 'தெலுகு ரிதுவுலு' (தெலுங்கு நாட்டுப் பருவங்கள்) என்பதும் அவருடைய சில சிறந்த கவிதைகளாகும்.

அவருடைய முப்பதுக்கு மேற்பட்ட நாவல்களில் 'வேயி படகலு' (ஆயிரம் நாகப் படங்கள்) தலைசிறந்ததாகப் போற்றப் படுகிறது. இந்தப் பெரிய புதினம் ஆந்திர நாட்டில் இரண்டு அல்லது மூன்று தலை முறைகளாகச் சமூகத்துறையிலும், பண் பாட்டுத் துறையிலும் நிகழ்ந்த மாற்றங்களை அழகுபடச் சித்திரிக்கிறது. 'செலியலி கட்ட' (சகோதரி அணை), 'தர்ம சக்ரமு' (தர்ம சக்கரம்), 'ஏக வீர' (மதுரையைப் பின்னணியாக அமைத்து எழுதப்பட்ட புதினம்), 'பத்தன்ன சேனுனி' (சேனுபதி பத்தன்ன), 'மாபாபு' (என் பாபு) முதலிய

பல புதினங்கள் மிகவும் விரும்பப்பட்டு, பல பதிப்புக்களில் வெளி வந்துள்ளன. சமூக அமைப்பு, வரலாறு, காதல், உளவியல் ஆகிய எந்த அடிப்படையில் அவர் புதினம் அமைப்பினும் அதில் மேற்கத்திய வாழ்க்கையை நோக்கிச் செல்லும் மனப்பாங்கைக் கண்டித்து இந்து தர்மத்தின் உயர்வினை வலியுறுத்தியும் கூறியுள்ளார்.

அவர் தம்முடைய சிறுகதைகளிலும், புதினங்களிலும் தமக்கே உரித்தான கலை வன்மையைப் பயன்படுத்தியுள்ளார். இதனுல் இவை, மேற்கத்திய முறையை ஒட்டியுள்ள பிற கதை, புதினங்களிலிருந்து எளிதில் பிரித்தறிய முடியும். தெலுங்கு மொழியின் சிறந்த சிறுகதைத் தொகுப்பு எதுவாயினும், அதில் சத்யநாராயணுவின் சிறுகதை தவருமல் இடம்பெறும் என்பதுடன் அதுவே தலை சிறந்ததாக விளங்கும் என்பதிலும் ஐயமில்லை.

'வேனராஜு', 'நர்த்தன சால' (நாட்டிய அரங்கு) முதலிய அவருடைய நாடகங்கள் பொருள் நிறைந்த தனித்தன்மை வாய்ந்த இசை நாடகங்கள், அரங்கில் சிறக்கவில்லை எனினும் ஆந்திர மக்களின் மனத்தில் குடிபுகுந்துவிட்டன.

நன்னைய்ய, காளிதாசா, கிருஷ்ண தேவராயா முதலிய பெருங் கவிஞர்களின் கவித்திறனைக் குறித்துக் கட்டுரைகளை இவர் வெளியிட்டுள்ளார். தெலுங்கில் திறனுய்வு உயர்ந்த நிலையை அடையவில்லை எனினும், சத்யநாராயணுவின் திறனுய்வுக் கட்டுரைகள் சிறந்தனவாகவே கருதப்படுவதுடன் அத்துறையில் அவர் ஒரு முன்னேடி என்றும் கருதப்படுகிருர்.

இவ்வகையில், பல்வேறு துறைகளிலும் ஈடுபட்ட சத்யநாராயணுவின் நூல்கள் அறுபதுக்கு மேற்பட்டுள்ளன. கவிதை, புதினம், நாடகம், திறனுய்வு முதலிய ஒவ்வொரு துறையிலும் அவர் அழிக்கமுடியாத இலக்கிணைப் பொறித்துவிட்டார் என்பது மிகையாகாது. அவருடைய பல சிறுகதைகளும், சில புதினங்களும் பிற இந்திய மொழிகளில்-குறிப்பாகத் தமிழ், கன்னடம், ஹிந்தி, வங்காளம் முதலியவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இவ்வளவு சிறப்புக்களைப் பெற்றிருப்பினும், அவரைக் குறை கூறுபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். கவிதையாயினும், உரை நடையாயினும் அவருடைய நடையில் சமஸ்கிருதத் தொடர்கள் பெருவாரியாக உள்ளன என்றும் அந்நடை சாதாரண மக்களுக்குப் புரியாதது என்றும் கூறப்படுகிறது. புதுமை வெறியுள்ளவர்கள் அவர் இந்து தர்மத்தைத் தெப்பமாகப் பிடித்துக்கொண்டு, சமூகப் பிரச்சினைகளை எதிர்த்துத் தீர்க்க விரும்பாது வீணுக்குகிருர் என்று குறை கூறுவர்.

விஜயவாடா, எஸ். ஆர். ஆர்., சி. வி. ஆர். கல்லூரியில் அவர் தெலுங்குப் பேராசிரியராகப் பணியாற்றிய பின்னர், கரீம்நகர் அரசினர் கல்லூரியின் தலைவராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்ருர். தற்பொழுது அவர் முழு நேரத்தையும் இலக்கியத் தொண்டிற்கே பயன்படுத்தி வருகிருர். அவருடைய வாழ்க்கையில் மற்ருென்று குறிப்பிடத்தக்கது: தெலுங்கு எழுத்தாளர் வேறு யாரும் பெறமுடியாமலிருந்தும், அவர் தம் எழுத்தின் மூலமாக நிறைய வருவாயைப் பெற்றதுதான்.

இரயில் வண்டியில் பாடிவரும் குருட்டுப் பிச்சைக்காரனிலிருந்து, இராமாயணம்வரை அவர் பாடாத அல்லது எழுதாத பொருளே இல்லை எனலாம். அவற்றில் சில கால வெள்ளத்தையும் கடந்து எக்காலத்திலும் படிப்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயமே இல்லை.

# மாஸ்தி வெங்கடேச அய்யங்கார்

மாஸ்தி என்று சொன்ன உடனே கவிதை உள்ளம் படைத்தவர்க்கு 'ஆஸ்தி' என்ற சொல் நினைவு வருவது இயற்கையே. "மாஸ்தி கன்னடத்தின் ஆஸ்தி" என்ற புகழ்மொழி படித்தவர்களிடையே வழங்கு வதில் வியப்பில்லை.

திரு.மாஸ்தி வெங்கடேச அய்யங்கார், சீனி வாசா என்ற புனைபெயரில் பலர்க்கும் நன்கு அறிமுகமானவர். அவர் சிறந்த கவிதைகள், புதினங்கள், நாடகங்கள், திறனாய்வுக்கட்டுரை கள் முதலிய பலவற்றை இயற்றியிருப்பினும் அவருடைய சிறு கதைகளே மிகவும் புகழப் படுவன ஆகும். அவருடைய சிறுகதைகள் கன்னட இலக்கியத்துக்கே தலை சிறந்த களஞ்சியம் என்று கூற வேண்டும். நாட் டின் பண்பாட்டு வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் அவருடைய ஒவ்வொரு சிறுகதையும் அமைந்துள்ளது. அவருடைய ஒவ்வொரு சிறு கதையையும் ஒரு சிறு காவியம் என்றே கூறலாம்.

திரு. கேரூர் வாசுதேவாச்சார், திரு. பஞ்சே மங்கேஷ்ராவ் முதலியவர்கள் கன்ன டத்தில் முதன் முதலில் சிறு கதைகள் எழுதியவராவர். அவர்கள் வழியைப் பின் தொடர்ந்த திரு. மாஸ்தி சிறுகதை எழுது வதை ஒரு கலையாக மாற்றியதுடன், இன் றைய உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து, சிறுகதையைக் கன்னட இலக்கியத்தின் சிறந்த அங்கமாக அமைத்து விட்டார்.

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்னர், 'ரங் கன மதுவே' (ரங்கனின் திருமணம்) என்ற சிறுகதையைத் தீட்டினர். அதுவே அவருடைய முதல் சிறுகதை. சிறுகச் சிறுக வளர்ந்த அவருடைய சிறுகதைகள் இன்று பதினொன்று பெரிய தொகுப்புக்களாக அமைந்துவிட்டன. அவருடைய தலைசிறந்த சிறுகதைகளில் சில 'ஹேமகூட திந்த ஹிந்திருகித மேலெ' (ஹேமகூடத்தி லிருந்து வந்த பின்னர்), 'மசுமதி', 'மொசரின மங் கம்மா' (தயிர்க்காரி மங்கம்மா), 'கௌதமி ஹேளி கத' (கௌதமி சொன்ன கதை) முதலி யனவாகும். அவர் தம்முடைய சிறுகதை களில் பலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். அவருடைய நண்பரான திரு. ராஜாஜி அவர்கள் அவ ருடைய சிறு கதைகள் சிலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

சிறுகதைகளைப்போலவே அவருடைய கவிதைகளும் சிறப்புடையன ஆகும். எளிய, தூய கன்னடச் சொற்களைக் கொண்டு பல பத்திக் கவிதைகளை அவர் இயற்றியுள்ளார். நடை மிக எளியதாக இருப்பினும், கவிதை கள் நுட்பமான பொருள் ஆழம் உடையன. அவருடைய 'அருணா', 'பின்னஹா' முதலியன அவற்றில் தலை சிறந்தன வாகக் கருதப்படுகின்றன. அக்கவிதை களின் பொருளாழத்தை உணராத சிலர் அவை வசன கவிதைகள் என்றும் கூறுவ துண்டு. அவருடைய கதைப் பாடல்கள் படிப்பவர்களின் உள்ளத்தை ஈர்த்து உயர்ந்த தத்துவங்களை நோக்கி அழைத்துச் செல்வனவாகும். எளிய, நன்கு பழகிய ஒரு சில சொற்களைக் கொண்டு கதையைச் சுவை குன்றாத வகையில் பாடலாக இயற்று வதில் திரு. மாஸ்திக்கு நிகர் அவரேதான்.

அவருடைய 'கௌடர மல்லி' (கௌண்டர் குடும்பத்து மல்லி), 'கனகதாசரு' முதலியன அவற்றில் மிகச் சிறந்தனவாகும்.

அவருடைய நாடகக் காவியங்களில் தலை சிறந்தது 'யசோதரா' ஆகும். புத்தரைப் பிரிந்த யசோதரா பிரிவுத் துன்பத்தைத் தன் மனத்துள் அடக்கி அவர் வருகைக்காகப் பொறுமையாகக் காத்திருந்த நிலையை அவர் மிகவும் உணர்ச்சிகரமாக வருணித்துள்ளார். திரு. மாஸ்தியின் உயர்ந்த கவிதை உள்ளத்தை இந்நூலில் காணலாம். அது கன்னட இலக்கியத்துக்கே ஒரு சிறந்த காணிக்கை எனலாம். மற்றும் ஷேக்ஸ்பியரின் பல நாடகங்களையும் அவர் கன்னடத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

அவருடைய புதினங்களில் சிறந்தவை 'சென்ன பசவ நாயகா', 'சிக்க வீர ராஜேந்திரா' ஆகிய இரண்டுமாகும்; வரலாற்று அடிப்படையில் எழுதப்பட்ட இந்தப் புதினங்களில் அவர் அரண்மனை, சேனைகள் முதலியவற்றை வருணிப்பதில் அதிக அக்கறை காட்டாமல், பொதுமக்களின் வாழ்க்கையை வர்ணிப்பதில் அதிகக் கவனம் செலுத்தியுள்ளார். அவருடைய புதினங்களிலும், சிறுகதைகளிலும் பெண்களிடத்தில் அவர் காட்டும் பரிவும், பக்திமான்களிடம் அவர் பெற்றுள்ள ஈடுபாடும் நன்கு புலனாகும். அவருடைய எளிய நடை படிப்பவர் உள்ளத்தைக் கவர்ந்துவிடும். 'சுப்பண்ணா' என்ற அவருடைய புதினம் தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

திரு. மாஸ்தி அவர்கள் தம் ஆழ்ந்த புலமையைப் பயன்படுத்திச் சிறந்த திறனாய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளார். இராமாயணத்தைக் குறித்து 'ஆதிகவி வால்மீகி' என்ற நூலையும், பாரதத்தைக் குறித்து 'பாரத தீர்த்த' என்ற திறனாய்வு நூலையும் அவர் எழுதியுள்ளார். இவ்விரண்டு சிறந்த நூல்களிலிருந்து இதிகாசங்களில் அவர் பெற்றிருக்கும் புலமையும், சிறிய பாத்திரங்களையும் நுணுகி ஆராயும் அவர்தம் பெருமையும் நன்கு புலனாகும்.

திரு. மாஸ்தி அவர்கள் உயர்ந்த அரசாங்க அலுவலிலிருந்து ஓய்வு பெற்றவர். ஆனால் அவர் எளிய பழக்கவழக்கங்களுடன் சாதாரண வாழ்க்கையை வாழ்ந்து வருவதைப் பார்ப்பவர்க்கு இது வியப்பாக இருக்கும். உயர்ந்த தொழிலாயினும் அவருடைய வாழ்க்கை முறையை மாற்றவில்லை என்பது தெளிவாகும்.

அறுபத்தெட்டு ஆண்டுகள் நிறையப் பெற்ற அவர் இப்பொழுதும் இலக்கியப் பணியை விடவில்லை. 'ஜீவனா' என்ற ஒரு மாதப் பத்திரிகையை அவர் நடத்தி வருகிறார். கன்னட சாஹித்ய பரிஷத்தின் துணைத் தலைவராக அவர் பல ஆண்டுகள் பணியாற்றினார். கர்னாடகப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டத்தை அளித்து அவரைக் கௌரவித்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் எழுத்தாளர் சங்க மாநாட்டைத் துவக்கி வைத்தும், இந்த ஆண்டு பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் சங்கத்தின் மகாநாட்டுக்குத் தலைமைவகித்தும் சிறப்புறச் செய்தார். ஆங்கிலத்திலும் பல இலக்கியங்களைச் சமைத்த அவருக்கு இவை யாவும் உரிமையான கௌரவங்களே எனலாம்.

தாம் ஆற்றிய இலக்கியப் பணியுடன் நில்லாது திரு. மாஸ்தி அவர்கள், பேந்த்ரே, ராஜரத்னம் போன்ற சிறந்த எழுத்தாளர்க்கும் தக்க ஆதரவு தந்து ஊக்குவித்துக் கன்னட இலக்கியத்துக்கு மகத்தான தொண்டு செய்துள்ளார்.

**70,000 Books put in Andhra Homes!**
*Including*
**22,000 Books as free gifts!**
**More than 4,000 Subscribers!**

**A Monthly Magazine—Free!**
**and lifetime benefits!**

**And all this and much more for less than 17 nP. a day!**

*Join*

HLB

**THE HOME LIBRARY PLAN**

**TO DAY**

*For Complete details write without any obligation to:*

THE HOME LIBRARY PLAN
RASHTRAPATI ROAD,
**SECUNDERABAD A. P.**

எங்கள் வெளியீடுகளில் சில :

1. கோழி நோய்கள்
2. கோழிமுட்டை உற்பத்தி
3. பத்தே கோழிகள்

*

விவரமான விலைப்பட்டியலுக்கு
எழுதுங்கள் :

**கிராம ஜோதி நூலகம்,**
16, இராமகிருஷ்ண மடம் சாலை
**மயிலாப்பூர் :: சென்னை-4.**

**M/s. V. RAJAGOPALAN**
PAPER MERCHANTS

*

*Registered Office :*
**8, THIYAGARAYA ROAD, MADRAS-17.**

*

*Main Sales Office :*
**7, STRINGER STREET, G.T., MADRAS-1**

*

*Additional Sales Office :*
**61, BADRIAN STREET, MADRAS-1.**

Telephone : Sales 23488
Personal 24618
Residence 88732

FOR FINE PRINTING
IN ENGLISH, TELUGU & TAMIL

*

*Please Contact :*

**KALA PRINTERS**
16, USMAN ROAD
**T' NAGAR**
**MADRAS-17.**

## எங்கள் புதிய வெளியீடுகள்

❋

"மதருஸ் பணம் கடன் கொடுப்போர் சட்டம்"

"நில உச்சவரம்பு மசோதா சட்டமானல்"

❋

கிடைக்குமிடம் :

# சாம்ராஜ் பிரசுரம்,

பதிப்பாளர், புத்தக விற்பனையாளர்

14, பூந்தமல்லி பெரிய சாலை,

பெரியமேடு, சென்னை-3.

மற்ற புத்தகங்களும் கிடைக்கும்.

**அருணோதயம்**

தமிழகத்தின் புகழ்பெற்ற புத்தக வெளியீட்டு நிலையங்களிலே குறிப்பிடத்தக்கது.

**அருணோதயம்**

"வெளியீடுகளின் அமைப்பும், அழகும் மேலை நாட்டுடன் போட்டி போடத்தக்க முறையிலே அமைந்துள்ளன" என்ற பாராட்டுதலைப் பெற்றது.

**அருணோதயம்**

இதுவரை 150 புத்தகங்களை வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**அருணோதயம்**

புதிய விலைப்பட்டியலைப் பெற்று எங்கள் சிறந்த புத்தகங்களை வாங்குங்கள்.

# அருணோதயம்,

ராயப்பேட்டை, சென்னை-14.

# புத்தகப் பூங்கா : மதிப்புரை

## அனைத்துலக மனிதனை நோக்கி

**மூலம் :** ரவீந்திரநாத் தாகூர்
**மொழி :** திரு. அ. ச. ஞானசம்பந்தம், எம். ஏ.
**பதிப்பாளர் :** பாரி நிலையம், சென்னை-1.
**பக்கங்கள் :** 448; விலை ரூ. 10

உலக இலக்கிய வரலாற்றிலேயே – இலக்கிய உலக வரலாற்றிலேயே – 1961 ஆம் ஆண்டு தனிச்சிறப்புப் பெற்று விளங்குகிறது. காரணம் இந்த ஆண்டு முழுவதும் அனைத்து நாட்டுணர்வு மிகுதியும் படைத்த 'கவியரசர்' இரவிந்திரநாத் தாகூரின் நூற்றாண்டு விழா உலகெங்கணும் சிறப்பாகக் கொண்டாடப் படுவதே ஆகும். வேறு எந்த ஒரு கவிஞரின் நூற்றாண்டு விழாவும் இந்த அளவிற்கு உலக முழுவதும் இவ்வளவு சிறப்பாக இதற்குமுன் கொண்டாடப்பெற்றிருத்தல் அரிது.

மதிப்புரைக்குரிய 'அனைத்துலக மனிதனை நோக்கி' என்ற அரிய தலைப்பைக்கொண்ட பெரிய நூல் தாகூர் நூற்றாண்டு விழாவை யொட்டி, அமெரிக்க நாட்டுப் போர்டு பவுண்டேஷன் உதவிய நிதியின் துணை கொண்டு தாகூர் நினைவு மலர் வெளியீட்டுக் குழுவினர் அரிதின் முயன்று ஆங்கிலத்தில் வெளியிட்ட 'Towards the Universal Man' என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமே ஆகும். பதினெட்டுச் சிறந்த கட்டுரைகளின் தொகுப்பாகிய இந்நூல் கருவுற்று உருவாகிய வரலாற்றை இந்நூலின் தோற்றுவாயாக திரு. டக்ளஸ் என்ஸ் மன்ஞர் எழுதியுள்ள 'அறிமுக'மும் திரு. ஹுமாயூன் கபீர் வரைந்துள்ள 'முகவுரை'யும் பரிவுடன் பகர்கின்றன.

**கவிஞர் தாகூர் பெருமகனுரின் கருத்தோவியங்களின் தொகுப்பாகிய 'அனைத்துலக மனிதனை நோக்கி' என்னும் நூல், நூலின் அறிமுகமும் முகவுரையும் கூறுவதுபோல தாகூர் ஒரு கவிஞர் மட்டும் அன்று; 'இந்தியாவின் சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகோலிய பெரியவர்களில் அவரும் ஒருவர்' எனத் தெளிவுபடுத்தும் 'சர்வதேச முயற்சி'**

'அனைத்துலக மனிதனை நோக்கி', பேராசிரியர் ஹுமாயூன் கபீர் அவர்களின் ஊற்றுக்கோலிலிருந்து முப்பத்தாறு பக்கங்களைக் கொண்ட முத்தான 'முன்னுரை'யைப் பெற்றுள்ளது. இம்முன்னுரை கவிஞர் தாகூரின் கருத்துலகு பற்றிய அரியதோர் ஆராய்ச்சிக் கட்டுரையே ஆகும்.

'அனைத்துலக மனிதனை நோக்கி' பல்லாற்றானும் பல பேரறிஞர்களாலும் தேர்ந்து தெளியப் பெற்ற பதினெட்டுக் கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்நூலின் கட்டுரைத் தலைப்புக்களே கட்டுரைப் பொருள்களையும் ஓரளவு சுட்டிக் காட்டும் நேர்மையும் தெளிவும் பெற்றுள்ளன. பெரும்பாலும் சமுதாயச் சார்புடைய இக்கட்டுரை உலகுக்குள் நுழைந்தாலோ தாகூரின் கருத்துலகு நம்மை ஆட்கொண்டு விடுகிறது. உபநிடதக் கருத்துக்கட்கும் உலகியல் சிக்கல்கட்கும் இடையே அலைபாய்ந்த தாகூரின் கலையுள்ளம்-கருணை உள்ளம்–காட்சி அளிக்கிறது.

**கவியரசர் தாகூரின் கருத்தோவியங்களைத் தமிழாக்கம் செய்து 'ரவீந்தரரைக் கவீந்தரராக'த் தமிழ் மக்களுக்குச் சிறந்த முறையில் முதன்முதலாக அறிமுகம் செய்து வைத்த பெருமை கவியரசர் பாரதியாரின் தனியுரிமை.** பாரதியாரின் மொழியாக்கம் பெற்ற பெருமை தாகூருக்கும் உண்டு. இந்நூலில் இடம்பெற்றுள்ள சில கட்டுரைகள் பாரதியாரால் முன்பே ஓரளவு மொழியாக்கம் பெற்றுள்ளமையை நினைத்தால் வியப்பும் மகிழ்வுமே விளைகின்றன. அவர் காட்டிய நெறியைப் பின்பற்றித் தாகூரின் கலைச்செல்வங்களைத் தமிழாக்கம் செய்த

பெருமக்கள் பலர். ஆயினும் தாகூரின் 'கீதாஞ்சலி' முதலான கவிதைகளும், 'புயல்' முதலான புதினங்களும் தமிழாக்கம் பெற்றுள்ள அளவிற்கு அவருடைய கட்டுரைகள் தமிழாக்கம் பெறவில்லை. இக்குறையைப் போக்கி நிறை செய்துள்ளது 'அனைத்துலக மனிதனை நோக்கி' என்னும் தமிழாக்கம். இத் தமிழாக்கம் அனைவரும் போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளமைக்குக் காரணம் இவ்வாக்கத்தைச் செய்துள்ள பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் அவர்களே.

பேராசிரியர் அ. ச. ஞா. அவர்கள் 'இலக்கியக்கலை'யில் வல்லவராகப் பல காலம் உயர் கல்வித் தொண்டாற்றியவர்; இப்போது 'மொழி பெயர்ப்புக் கலை'யிலும் தன் வல்லாண்மையைப் புலப்படுத்தி வருபவர். சென்னை அரசினர் 'மொழிபெயர்ப்புக் கலை'யிலும் தன் வல்லாண்மையைப் புலப்படுத்தி வருபவர்.சென்னை அரசினர் மொழிபெயர்ப்புத் துறை துணை நெறியாளராக விளங்கும் சிறப்புப் பெற்றுள்ளவர். ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் மொழிப்புலமை பெற்றிருப்பதோடன்றி இளமை முதற்கொண்டே ஏராளமான இலக்கிய விஞ்ஞான-தத்துவ நூல்களை ஆங்கிலத்தில் படித்துப் பயன்கொள்ளும் பழக்கம் உடைய அவர்கள் இத் தமிழாக்கத்திற்கு உரியவராக அமைந்தது இரட்டிப்பு மகிழ்ச்சிக்கு உரியதே ஆகும்.

தமிழ்ப்புலமை நிறைந்தபேராசிரியர் அவர்கள் செய்துள்ள தமிழாக்கத்தில் மொழி நலங் குறித்துக் குறைகள் பலவாகக் காணல் இயலாது என்பது எவரும் அறிந்த ஒன்றே.ஆயினும் மொழிபெயர்ப்புத் துறை புதியது ;கடினமானது. தாகூரின் வங்கமொழிக் கட்டுரைகளைத் தக்கவாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவே எவ்வளவு முயற்சி தேவைப்பட்டது என்பதை திரு. ஹுமாயூன் கபீர் அவர்களின் முகவுரையே தெளிவாக்கும்.

பேராசிரியர் அவர்களின் தமிழாக்கத்தில் அரிய ஆங்கிலச் சொற்கள் பல சிறந்த தமிழாக்கம் பெற்றுள்ளன. அவற்றுள் தலைமை தாங்குவது இந்நூலின் தலைப்பே ஆகும். 'Towards Universal Man' என்பதற்கு ஏற்ற தமிழாக்கம் 'அனைத்துலக மனிதனை நோக்கி' என்பதே. வேறு சில சான்றுகள் : 1. அகமனத்திலும், நனவிலி மனத்திலும் (Subconscious and unconscious mind), 2. மதிப்புக்கள் (Values), 3. ஆளுமை (Personality), 4. ஒன்றல் (harmony), 5. தங்கிப் படிக்கும் பள்ளி (Residential School), 6. அழகுச்சாயல் (Grace.)

பேராசிரியரின் தமிழாக்கத்தில் சில அரிய தமிழ் வழக்காறுகள் காணப்பெறுவது அருந்தமிழ்ப் புலமையின் பெரும் பயனே. இரு சான்றுகள்: 1. அறிவு கொளுத்தும் சக்தி (பக்-3), 2. கருத்துக்களை ஈந்திருக்கிறார் (பக்-30), செந்தமிழ் வல்ல பேராசிரியர் அவர்கள் பேச்சு வழக்கிலுள்ள சொற்களையும் இடமறிந்து போற்றியுள்ளார். சில சான்றுகள் : வாலாயமான (பக்-8), சாக்கு போக்கு (பக்-36).

தமிழைப் பொறுத்த வரையில் ஆங்கிலத்தினும் வடமொழிக்கே அதிகச் செல்வாக்கு. ஆயினும் பேராசிரியர் செல்வாக்கு நிறைந்த வடமொழிச் சொற்கள்-சொற்றொடர்கட்கும் தக்க தமிழாக்கம் தந்துள்ளமைக்கு ஒரு சான்று:கோள்களும் விண்மீன்களும் தம்முடைய பார்வையாலும் பெயர்ச்சியாலும் மானிட சமுதாயத்தை ஆட்டிப் படைக்கின்றன (பக். 445).

மூல நூலாசிரியரின் இதயத் துடிப்புணர்ந்து பிறந்துள்ள தமிழாக்கம் இந்நூல். ஒரு சான்று: 'குருட்டுத்தனமான அச்சத்தால் தூண்டப்பட்டு மிக அடிப்படையானதாகிய நம்முடைய ஆண்மையைக் கூடப் பலியிட்டு, இந்தப் பூமியில் உள்ளதும் இல்லாததுமாகிய அனைத்திற்கும் வணக்கம் செலுத்திக் கீழ்ப்படியத் தயாராக இருக்கிறோம்.' ( பக். 208).

இரு சிறு குறைகள்:முதலாவதாக நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ள தாகூரின் புகழ்பெற்ற கவிதையின் தமிழாக்கமட்டுமேனும் கவிதையாகவே அமைந்திருக்கலாம். அடுத்த நிலையில் குறிக்கத்தக்கது, சில இடங்களில் வரும் வடவெழுத்துக்களும் வட

சொற்களும் தமிழ் எழுத்துக்களாகவும் தமிழ்ச் சொற்களாகவுமே ஆக்கம் பெற்றிருக்கலாம் என்பதே. சில சான்றுகள்: ஹிந்து, அதீதம், பூர்வ, பொக்கிஷம், நவீன, ஸஹோதனி,மூத்த சகோதரர், தீர்க்க தரிசனம், போதனு மொழி, புனருத்தாரண, ஜனநாயகம், மனமாச்சரியம், பிரஜை, சக மனிதர்களின் சுகதுக்கங்களை-இத்தகு வடசொற்கள் பல நூலின் முன்னுரை முடிய உள்ள முற்பகுதியிலேயே உள்ளன. ஏறத்தாழ இவை யாவும் தமிழாக்கம் பெறத்தக்க அடிப்படைச் சொற்கள் என்றே தோன்றுகின்றன.

மொத்தத்தில் பேராசிரியர் அவர்களின் தமிழாக்கம் தமிழுக்கும் தமிழர்க்கும் பெருமையும் நன்மையும் புரிவதே ஆகும். தமிழாக்கக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டு போலவே அமைந்துள்ள இந்நூலை அடியொற்றிப் பேராசிரியரே இன்னும் பல அரும் பெரும் நூல்களைத் தமிழகம் களிக்கத் தந்து உதவுவார்களாக.

பாரி நிலையம் பல துறைகள் பற்றியும் பண்பும் பயனும் செறிந்த நூல்களை வெளியிட்டுப் புகழ் ஈட்டும் நல்லமைப்பு. அவர்கள் இந்நூலைச் சிறந்த முறையில் அச்சியற்றி, சிந்தனை தேங்கும் தாகூரின் செவ்விய முகம் தாங்கும் அழகிய அட்டைப் படத்துடனும் உறுதியான காலிகோ கட்டடத்துடனும் உருவாக்கி வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் தொண்டு பாராட்டுக்குரியது. பத்து வெண் பொற்காசுகள் விலையுடைய இப்புத்தகம் ஒவ்வொரு நூல் நிலையத்திலும் இருக்கத்தக்கது.

**சுருங்கச் சொன்னல் தமிழை நுகரவும் தாகூரை உணரவும் ஒவ்வொரு தமிழனும் படிக்க வேண்டிய பயனுள்ள நூல்.**

**ந. ச.**

---

## பாடும் பாப்பா

**ஆசிரியர் :** புலவர் தணிகை உலகநாதன்
**பதிப்பாளர் :** சாந்தி நூலகம், சென்னை-1.
**விலை :** ரூ. 1.50

சின்னஞ் சிறு குழந்தைகளைப் பெரிதும் கவர்வது பாட்டு. நல்ல பாடல் ஒன்று கிடைத்துவிட்டால், குழந்தைகள் அதை அடிக்கடி பாடியும் பாட்டுக்கு ஏற்றபடி ஆடியும் மகிழ்கின்றனர். உற்சாகமாகக் குழந்தைகள் பாடி ஆடிப் பயனடையத்தக்க 50 பாடல்களும், ஏறத்தாழ 75 படங்களும் கொண்ட 'பாடும் பாப்பா' என்னும் இந்த நூலைக் குழந்தைகளுக்குத் தந்திருக்கிருர் புலவர் தணிகை உலகநாதனவர்கள். பிஞ்சுப் பாடல்கள், பிள்ளைப் பாடல்கள், சிந்தனைப் பாடல்கள், சிரிப்புப் பாடல்கள், கதைப் பாடல்கள் என ஐந்து பகுதிகள் கொண்ட இந்நூலில் பாட்டியும் தாத்தாவும், எல்லாம் தமிழ், உப்பின் பெயர்க் காரணம், பறக்கும் பழம், ஆறுமுகனின் கதை முதலியவை ஆசிரியரின் கற்பனைத் திறனை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

'எல்லோருக்கும் நல்லவன்' என்ற பாடலில், எலிக்குப் பூனையும், பூனைக்கு நாயும், மானுக்குப் புலியும், நண்டுக்கு நரியும், பாம்புக்குக் கீரியும் பகை எனக் கூறிவிட்டு,

**'எனக்குப் பகையே இல்லைநான்.**
**எல்லோ ருக்கும் நல்லவனே'**

என்று ஒரு குழந்தை கூறுவது மிகவும் அழகாயுள்ளது.

'அருமைப் பிள்ளைகள்' என்ற பாடலில், தென்னம் பிள்ளை, கிளிப் பிள்ளை, அணிற் பிள்ளை ஆகியவற்றின் சிறப்பியல்களை வியந்து பேசுகின்ற சிறுவன்,

**'பெற்ரேர் பெரியோர் சொல்லைக் கேட்டுப்**
**பிழையில் லாமல் நடப்பேன்.**
**வெற்றி யோடு வாழ்வேன். நானும்**
**மிகவும் நல்ல பிள்ளை!'**

என்று பெருமையோடு பாடுவது ஒரு சிறப்பு. நாமக்கல் கவிஞர் அவர்கள், இந்நூலுக்கு வழங்கியிருக்கும் தமது மதிப்புரையில், குழந்தைகளின் மன வளர்ச்சி குறித்து அழகுற எடுத்துக் கூறியுள்ளார். எளிய நடை, இனிய சந்தம், கற்பனை நயம், கருத்துச் செறிவு யாவும் ஒருங்கே அமைந்த இப்புத்தகத்தைக் கண்கவரும் அச்சு அமைப்புடன் குழந்தைகள் நாளன்று வெளியிட்டுள்ள பதிப்பாளர்கள் பாராட்டுக் குரியவர்களே.

அழ. வ.

---

## குழந்தையின் பிறப்பு

**ஆசிரியர் :** டாக்டர் ருக்மணி-கிருஷ்ணசாமி
**பதிப்பாளர் :** கலைமகள் காரியாலயம், சென்னை-4
**விலை :** 1.75

எளிய நடையில் இனிமையாக எழுதப்பட்டுள்ள இந்நூலின் தலைப்பே வாசகர்களின் ஆவலைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. குழந்தையின் பிறப்பைப் பற்றி அறியும் ஆவல் ஒரு பெண்ணிற்கு-அதிலும் மணவாழ்வில் பிரவேசித்த பின்னர் எழுவது இயற்கை. தாய்மை உணர்வின் இன்பப் பெருக்கினிடையே தான் கண்ட, கேட்ட சம்பவங்கள்–செய்திகளின் அச்சுறுத்தலும் இராமலிருப்பதில்லை. சகஜமாகத் தனக்கு உற்றவரிடமோ, தாயிடமோ கேட்டறிய சங்கோஜம் ஏற்படுவதும் இயல்புதான்.

முன்னுரையில் ஆசிரியை எழுதியிருப்பதுபோல், இந்நூல் கர்ப்பிணிகளான இளம் பெண்களின் அச்சத்தைத் தவிர்க்கக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியை நிரம்பப்படித்தவர் என்பதை அவர் எடுத்துக் கூறியிருக்கும் நூல்களின் பட்டியல் விளக்குகின்றது. பொதுவாக ஆரோக்கிய நூல்கள் ரசமற்ற–விவரங்கள் அடங்கியதாக இருக்கும். ஆனால் நூலாசிரியை – இந்நூலை - விறுவிறுப்புடன் கூடியதாயும் அதே சமயத்தில் தெளிவான புத்திமதிகளுடனும் எழுதியிருப்பது பாராட்டத்தக்கது.

கருத்தரித்தல்–பின்னர் அதன் வளர்ச்சி, பிறப்பு முதலியவற்றைப் படங்களுடன் விரிவாக விளக்கியுள்ளார். கர்ப்பிணிகளைப் பராமரித்தல் என்ற அத்தியாயத்தில் ஓய்வெடுத்தல் பற்றி எழுதியுள்ள குறிப்புக்கள் பெண்களுக்கு மிகவும் பயன்படக் கூடிவையாகும். சுகப்பிரசவம் - கர்ப்பிணியின் மனநிலை முதலியவற்றைப்பற்றி ஆசிரியை எழுதியுள்ள விஷயங்கள் கவனத்துக்குரியவை. பெண்களுக்கான நூல்களில் இத்தகைய ஆரோக்கிய சம்பந்தப்பட்ட நூல்கள் முதலிடம் பெறத்தக்கவையாகும். பிரசவம், கர்ப்பம் பற்றிப் பல நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. குழந்தையின் பிறப்பைப் பற்றி மட்டும் விரிவாகக் கூறி பெண்களின் பிரசவ பயத்தை விரட்டியடிக்க நினைத்துள்ள ஆசிரியை ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார் என்று கூற வேண்டும். பெண்கள் யாவரும் விரும்பிப் படிக்க வேண்டிய நூல் இது.

சரஸ்வதி ராமனாத்.

# அண்மையில் வெளிவந்த தமிழ் நூல்களின் பட்டியல்

**பாரி நிலையம்**, 59, பிராட்வே, சென்னை—1

| | ரூ. | நபை. |
|---|---|---|
| கடல் கண்ட கனவு —'சோமு' | 7 | 00 |
| அக்கரைச் சீமையில் —'சோமு' | 5 | 00 |
| கோயம்புத்தூர் மாவட்டம் —'சோமலெ' | 4 | 00 |
| கன்யாகுமரி மாவட்டம் —'சோமலெ' | 3 | 00 |
| சேலம் மாவட்டம் —'சோமலெ' | 3 | 00 |

**தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்**, 1-140, பிராட்வே, சென்னை—1.

| | ரூ. | நபை. |
|---|---|---|
| கவிதை யனுபவம் —ந. சுப்பு ரெட்டியார் | 10 | 00 |
| கதை அனுபவம் (ஆறு நூல்கள்—தனித்தனி) —சு. அ. இராமசாமிப் புலவர் | 1 | 00 |
| விந்தைக் கதைகள் (நான்கு நூல்கள்—தனித் தனி) —கா. அப்பாத்துரை | 1 | 00 |
| கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழா மலர் | 12 | 50 |
| டாக்டர் சேதுப் பிள்ளை —அ. க. நவநீதகிருட்டிணன் | 3 | 50 |

**தமிழகம்**, 59, பிராட்வே, சென்னை—1

| | ரூ. | நபை. |
|---|---|---|
| வீட்டு வைத்தியம் (மலிவுப் பதிப்பு) —ஸ்ரீ ஹரி | 2 | 00 |
| தமிழ்நாட்டுச் சரித்திரக் கதைகள் —பி. ஸ்ரீ. | 1 | 75 |
| பாரத நாட்டுச் சரித்திரக் கதைகள் —பி. ஸ்ரீ. | 1 | 75 |
| தமிழகத்துக் கனிவளம் —உதயமூர்த்தி | 1 | 00 |

**கலைமகள் வெளியீடு**, முண்டகண்ணி அம்மன் கோயில் தெரு, சென்னை—4

| | ரூ. | நபை. |
|---|---|---|
| திரைக்குப்பின் —"ஆர்வி" | 9 | 50 |
| மனதுக்கு இனியவள் —ஆர். சூடாமணி | 2 | 80 |
| குழந்தையின் பிறப்பு —டாக்டர் ருக்மணி கிருஷ்ணசாமி | 1 | 75 |
| ஆச்சாரிய ஸ்வாமிகள் உபந்யாசங்கள் (மூன்று பாகங்கள்) | 2 | 00 |
| ஆயிரத்தில் இருவர் —பி. கே. மூர்த்தி | 1 | 50 |

**ஜெமினி வெளியீடு**, 3-18, எல்லையம்மன் காலனி, சென்னை—6

| | ரூ. | நபை. |
|---|---|---|
| இன்குலாப் —மூலம்: கே. ஏ. அப்பாஸ் —மொழி: எம். ஏ. அப்பாஸ் | 7 | 00 |
| கள்ளத்தோணி —எம். ஏ. அப்பாஸ் | 2 | 50 |
| விசை வாத்து —தி. ஜ. ர. | 2 | 00 |
| உதய சந்திரன் —விக்ரமன் | 4 | 00 |
| வாழத்தான் வேண்டும் —மாஜினி | 1 | 75 |

**தமிழ்ப் புத்தகாலயம்** 393, பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை—14

| | ரூ. | நபை. |
|---|---|---|
| நான் கண்ட எழுத்தாளர்கள் —கு. அழகிரிசாமி | 2 | 00 |
| மூன்று பரிசுகள் —அழ. வள்ளியப்பா | 1 | 00 |
| சொல்லு பாப்பா —நாக. முத்தைய்யா | 1 | 00 |
| தவளை ராஜா —சரஸ்வதி ராம்நாத் | 0 | 80 |
| பலநாட்டுச் சிறுகதைகள் | 3 | 00 |

# Puthaga Nanban

*With Best Compliments*

*from*

**The Southern Languages Book Trust**

**25, Sterling Road**

**Madras-34**

Kindly fill in the attached form and return it to us for future supply of the Magazine.

**SUBSCRIPTION ORDER FORM**

To

The General Manager,
Southern Languages Book Trust,
25, Sterling Road,
Madras-34.

Dear Sir,

Please enrol me as a subscriber to your quarterly **Puthaga Nanban.** The annual subscription of Rs. 2/- is sent herewith/separately by Postal order/money order.

Yours faithfully,

Signature

From

Name:

Address:

ரூ.நபை.

வானதி பதிப்பகம், பாண்டி பஜார், சென்னை-17

| | | |
|---|---|---|
| பச்சை பங்களா —பி. வி. ஆர். | 7 | 50 |
| மதுராந்தகியின் காதல் —மாயாவி | 7 | 50 |
| கோமேதகக் களவு —மாயாவி | 3 | 50 |
| கடல் கன்னிகை —மாயாவி | 3 | 50 |

ஸ்டார் பதிப்பகம், 66, பெரிய தெரு, சென்னை-5

| | | |
|---|---|---|
| பாரதி—நான் கண்டதும் கேட்டதும் —பி. ஸ்ரீ. | 2 | 00 |
| நூதன சமையல் கலை —கே. செல்லம்மாள் | 2 | 50 |
| மழலைச் சோலை —காரா. நாச்சியப்பன் | 1 | 00 |
| மழலைச் செல்வம் —நாக. முத்தையா | 1 | 00 |
| ஊர்வசி —ந. சிதம்பர சுப்ரமணியன் | 2 | 00 |

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, புத்தக வெளியீட்டாளர், திருநெல்வேலி—1

| | | |
|---|---|---|
| வேங்கடம் முதல் குமரிவரை (நான்கு பாகங்கள்—தனித்தனி) —தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் | 3 | 50 |
| ரசிகமணி டி. கே. சி. —தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் | 2 | 50 |
| தமிழ்க் கோயில்கள்-தமிழர் பண்பாடு —தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் | 1 | 50 |
| மரகதக் கல் —பீ. எஸ். மணி | 2 | 00 |

## (தமிழ் நூல் பட்டியல்—தொடர்ச்சி)

| | ரூ. | நபை. |
|---|---|---|
| **மீனுட்சி புத்தக நிலையம்,** 60, மேலக் கோபுரவாசல், மதுரை | | |
| கதை அரங்கம்—1 (கதைக் கோவை) | 2 | 50 |
| மலர் மஞ்சம் —தி. ஜானகிராமன் | 9 | 50 |
| காப்பியச் சிந்தனைகள் —தி. அ. சொக்கலிங்கம் | 4 | 75 |
| நியாயக் களஞ்சியம் —கு. நடேசக் கவுண்டர் | 2 | 25 |
| தேவன் வருவாரா ? —ஜெயகாந்தன் | 3 | 00 |
| **செல்வி பதிப்பகம், காரைக்குடி—1** | | |
| கருத்தும் கற்பனையும் —பூ. அமிர்தலிங்கன் | 2 | 25 |
| இலக்கியப் பலகணி —பொ. சுந்தரமூர்த்தி நாயனுர் | 2 | 00 |
| தமிழகப் பழமொழிகள் —கே. எஸ். லட்சுமணன் | 2 | 00 |
| நட்சத்திரக் குழந்தை —மூலம் : ஆஸ்கார் ஒயில்ட் —மொழி. : டி. ஆர். சர்மா | 1 | 00 |


**சுவையும் பயனும் கருதிப் படிக்கத்தக்க நூல்கள்**

**அறிவியல்**

1. பிரபஞ்சமும் பூமியும் ... ரூ 2.00
2. பூனைக் குடும்பம் ... ரூ. 1.50
3. விநோத விலங்குகள் —முதல் புத்தகம் .. ரூ. 1.50
4. ,, —இரண்டாம் ,, ... ரூ. 1.50

**வரலாறு**

5. புத்தர் வாழ்வினிலே ... ரூ. 1.00
6. கிறிஸ்து வாழ்வினிலே ... ரூ. 1.00

**கதை**

7. அனுராதா (' துமிலன் ') ... ரூ. 7.00

**உமாதேவன் கம்பெனி,**
தபால் பெட்டி நெ. *1453,*
தேனும்பேட்டை,
சென்னை-18.



**உங்கள் இல்லத்திலும் இதயத்திலும்**
**இருக்கவேண்டிய நூல்கள்**
**எங்களிடம் உள்ளன**

சரித்திர நாவல்கள்
சமூக நாவல்கள்
துப்பறியும் நாவல்கள்
சிறுகதைத் தொகுப்புக்கள்
கட்டுரைப் புத்தகங்கள்
வாழ்க்கை நெறி நூல்கள்
சிறுவர் நூல்கள்

விவரங்களுக்கு எழுதுங்கள் :

**வானதி பதிப்பகம்,**
82/11, பாண்டி பஜார்,
சென்னை-17.

## மாணவர்களுக்கும் நூல் நிலையங்களுக்கும் இன்றியமையாத சிறந்த புத்தகங்கள்!

| | | |
|---|---|---|
| 1. | தமிழ் நாட்டுச் சரித்திரக் கதைகள் ... ... ... | 1-75 |
| 2. | பாரதநாட்டுச் சரித்திரக் கதைகள் ... ... ... | 1-75 |
| 3. | பலரக விளையாட்டுகள் ... ... ... ... | 1-00 |
| 4. | விடை தெரியுமா? ... ... ... ... | 1-00 |
| 5. | ஓர் குலம் ... ... ... ... ... | 1-00 |
| 6. | ஈசாப் நீதிக் கதைகள் ... ... ... ... | 1-25 |
| 7. | ஷ இரண்டாம் பகுதி ... ... ... ... | 1-25 |
| 8. | ஷ மூன்றும் பகுதி ... ... ... ... | 1-25 |
| 9. | புறநானூற்றுச் சிறு கதைகள் ... ... ... | 1-00 |
| 10. | ஷ இரண்டாம் பகுதி ... ... ... ... | 1-00 |
| 11. | தமிழகத்தின் கனிவளம் ... ... ... ... | 1-00 |
| 12. | மனோன்மணீயம் ... ... ... ... | 2-00 |
| 13. | பாலர் கதைக் களஞ்சியம் ... ... ... ... | 1-50 |
| 14. | முதல் உதவி ... ... ... ... .. | 2-00 |
| 15. | இந்தியாவின் கதை ... ... ... ... | 2-00 |
| 16. | ஷேக்ஸ்பியர் கதைகள் ... ... ... ... | 1-50 |
| 17. | உருவகக் கதைகள் ... ... ... ... | 1-50 |
| 18. | நீதி நூல்கள் ... ... ... ... ... | 1-00 |

**தமிழகம், 59, பிராட்வே, சென்னை-1**

## கல்லூரித் தமிழ்க் குழுவினுல் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள்

| | | ரூ. |
|---|---|---|
| ஐரோப்பிய வரலாறு—(கி.பி. 1500-1815)—மு. ஆரோக்கியசாமி, எம்.ஏ., பி.எச்டி. | முதல் பாகம் | 3-50 |
| —(கி.பி. 1815-1945) ,, ,, | இரண்டாம் பாகம் | 3-00 |
| இங்கிலாந்து வரலாறு—டாக்டர் கே. கே. பிள்ளை ... ... | ... | 7-50 |
| இங்கிலாந்தின் அரசியல் அமைப்பு வரலாறு—பா. சூரியநாராயணன் | முதல் பாகம் | 6-00 |
| ,, ,, ... | இரண்டாம் பாகம் | 8-00 |
| இந்திய வரலாறு—(கி.பி. 1200 வரை)—ஆர். ஸத்யநாதய்யர் ... | முதல் பாகம் | 7-76 |
| ,, —(கி.பி. 1100-1707 வரை) ,, ... ... | இரண்டாம்பாகம் | 7-12 |
| இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—ஏ. முத்தையா ... | முதல் பாகம் | 3-00 |
| தொழிலமைப்பும் நிருவாகமும்—ஒ. இரா. கிருட்டினசாமி ... | முதல்பாகம் | 7-50 |
| ,, ,, ... | இரண்டாம் பாகம் | 7-50 |
| பொருளாதாரம்—சி வேலாயுதம் ... ... ... | முதல் பாகம் | 8-40 |
| அரசியல் அமைப்புக்கள் (ஐரோப்பிய நாடுகள்)—பு. ர. பக்கிரிசங்கர் ... | ... | 6-00 |
| பொதுத்துறை ஆட்சி இயல்—பெ. நடராசன் ... ... ... | ... | 5-00 |
| சில எளிய உளவியல் சோதனைகள் வழிகாட்டி—ஜி. டி. போவாஸ் ... ... | ... | 3-00 |
| உளவியல்—டாக்டர் தா. ஏ. சண்முகம் ... ... ... | முதல் பாகம் | 6-00 |
| மேல்நாட்டுத் தத்துவ வரலாறு—டாக்டர் டி. எம். பி. மகாதேவன் ... | முதல் பாகம் | 4-00 |
| புவிப்புறவியல்—நா. அனந்த பத்மநாபன் ... ... ... | முதல் பாகம் | 2-75 |
| உயிரியல்—வே. சா. ராமசாமி ... ... ... ... | ... | 5-60 |
| இலகு பௌதிகம்—பா. சவரிமுத்து ... ... ... ... | ... | 3-75 |
| வான நூல்—ரா. மகாதேவன் ... ... ... ... | ... | 2-60 |

மற்றும் சில புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கிடைக்குமிடம்: **ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,**

**165, மௌண்ட் ரோடு, மதராஸ்-2,**




CONNEMARA PUBLIC LIBRARY